அகரத்தின்

# மணிப்புறா

எழுத்தால் எழுவோம்!

பங்குனி 2013

சிறகு 01

விரிப்பு 02

March 2013

Issue 02

பல்சுவையும் பரிணமிக்கும் இலக்கிய சஞ்சிகை



60/=

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மணிப்புறா
# ஆண்டுச்சந்தா ரூ.600/ =

மணிப்புறா காலாண்டு இதழ் 2013ல் இருந்து மகிழ்வோடு மலர்கிறது. இதன் மலர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் அன்பளிப்புச் செய்யும் நல்ல உள்ளங்கள் நிறுவுநரிடம் தாங்கள் விரும்பும் தொகையை நேரில் வழங்கலாம்.

அல்லது

அஞ்சல் அலுவலகம் கல்முனையில் மாற்றக்கூடியவாறு காசுக்கட்டளை அனுப்பலாம்.

POST OFFICE KALMUNAI - FOR MONEY ORDERS

காசுக்கட்டளைகளை

செ.துஜியந்தன்

மருதநாயகம் வீதி,

பாண்டிருப்பு – 02

கல்முனை.

MONEY ORDERS IN FAVOUR OF S.THUJIYANTHAN

நீங்கள் அளிக்கும் பயணம் மணிப்புறாவின் வளர்ச்சிக்கும் அகரம் சமூக அமையம் முன்னெடுக்கும் சமூக மேம்பாட்டுக்கு பயன்படுத்தப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிப்புறா!
எழுத்தால் எழுவோம்!

# மணிப் புறா

ஆரம்பம் : 12.12.2012

(தி.வ.ஆண்டு - 2043)

**நிறுவுநர் :**
திரு.செ.துஜியந்தன்
(தலைவர், அகரம் சமூக அமையம்)
தொ.பே.இல.: 0754303309
E.mail : Sthujiyanthan@yahoo.com

**ஆசிரியர் :**
பாவாணர் அக்கரைப்பாக்கியன்

**துணை ஆசிரியர்:**
புதுமை வாணன் (க.டணிஸ்கரன்)
தொ.பே.இல.: 0752886752
0778511890
E.mail : daniskaran@gmail.com
Web : www.ilayanathi.blogspot.com
இல.111, அருச்சுனர் வீதி,
பாண்டிருப்பு - 1, கல்முனை.

**தொடர்புகளுக்கு:**
பாவாணர் அக்கரைப்பாக்கியன்
பெரிய நீலாவணை,
கல்முனை,
இலங்கை.
தொ.பே.இல.: 0759090342
E.mail:Kpakkiyarajaha@ Yahoo.com

ஆக்கங்களுக்கு ஆக்கியவர்களே பொறுப்பு.
(ஆசிரியர்)

*ஆசிரியர் பக்கம்* 02
*நம்முள் மறைந்து இருக்கும் தெய்வீகம்* 04
அருட்சகோதரர் கலாநிதி S.A.I மத்தியு
*கவிதை இலக்கியம்* 08
கவிமணி நீலா பாலன்
*தீ (ர்)வுக்கு வழி காண்போம்!* 12
சாய்ந்த மருதூர் கே.எம்.ஏ.அஸீஸ்
*பேச முடியாத இடமிருந்து* 13
கல்ஹாரான்
*மாணவர் சமூகமயமாதல் (கல்வி உளவியல்)* 15
ஆ.உலகராஜா - தம்பிலுவில்
*எமது நிலை* 17
அக்கரை மாணிக்கவாசகர்
*தொட்டதும், விட்டதும் கெட்டது!* 18
புதுமைவாணன்
*மட்டக்களப்பு கல்லடிப் புதிய பாலம்* 22
அகரம் துஜியந்தன்
*பிறப்பும் இறப்பும்* 24
லக்ஷ்மி பிரியன் - பெரியநீலாவணை
*விடியல் தேடும் விதைகள் (மாணவர்பகுதி)* 27
*காலைப்பொழுது*
T.சினேகா
*மணிப்புறாவின் பயணம்*
ம.ஜினேந்திரன்
*வேட்பாளர்*
பாக்கியராசா மிதுர்ஷன்
*கவிஞர் மு. சடாட்சரனின் பாதைபுதிது* 29
துணை ஆசிரியர்
*அகரத்தின் வெளிச்சங்கள்* 31
*ஆரோக்கிய வாழ்வுதரும் யோகம்* 33
கா.சந்திரலிங்கம்
*பூமணக்கும் பூவையரின் புகலிடம் தான்..* 36
சித்தி நயீமா வஸீகரன்
*ஔவைப்பாட்டி* 38
பாவாணர் அக்கரைப்பாக்கியன்
*தாயாதி வீடு* 39
ஆத்மராஜா றூத் சந்திரிக்கா
*பெண்களே நாட்டின் கண்கள்* 44
திருமதி. ஜெனிதா பிரதீபன்
*பழமொழி பரமசிவத்தார்* 48
பற்றாரான்
*இலகு சித்த மருத்துவம்* 50
வைத்தியர் இராசலிங்கம் - பாண்டிருப்பு
*சமூகமும் சமாதானமும்* 51
சிவ ஸ்ரீ.சிவபாலன்ஐயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிரியர் பக்கம்

## நன்றி மலர்கள் சொரிகின்றன...

அகரத்தின் மணிப்புறா கலை இலக்கிய முத்திங்களிதழின் இரண்டாவது வெளியீட்டினூடாக உங்களைச் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றோம். முதலாவது இதழின் வருகை இலக்கிய உலகில் சலசலப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. எதிர்பார்க்கவேயில்லை.

நாட்டின் எல்லாப் பாகங்களிலிருந்தும் வந்துகுவிந்தன வாழ்த்துக்கள். இலக்கிய ஆர்வலர்கள், எழுத்தியலாளர்கள், கல்விச்சமூகத்தைச் சேர்ந்தவர்களென்று... மணிப்புறாவின் தனித்துவத்தை வரவேற்று வரைந்த அனைவரது மடல்களும் கிடைக்கப்பெற்றோம். ஒரு சில விமர்சனங்களும் மணிப்புறாவுக்குச் சக்தியைக் கொடுத்திருக்கின்றது.

ஈன்ற பொழுதில் பெரிதுவந்த தாயின் நிலை எமக்கு. கல்முனை பிரதேசத்தைச் சேர்ந்த மூத்த இலக்கியவியலாளர் கவிமணி, கலாபூஷணம் கல்முனைப்பூபால் - நீலாபாலன் அவர்கள் தினகரனிலும், தினக்குரலிலும் மணிப்புறாவின் வரவை வரவேற்று, அதுதாங்கி வந்த இலக்கியப் பெறுமானம் மிக்க மகரந்தங்களை, மனந்திறந்து பாராட்டி நீண்ட கட்டுரைகளை வரைந்திருந்தார். அவருக்கு மணிப்புறாவின் நன்றிகள் உரித்தாகட்டும். மற்றும், இரா நாகலிங்கம்(அன்புமணி) செங்கதிர் ஆசிரியர் செங்கதிரோன், கவிஞர் மு.சடாட்சரன் முதலான இன்னும் பல இலக்கியச் செம்மல்களுக்கும் மணிப்புறாவின் நன்றிகள் என்றுமுண்டு.

மணிப்புறா அனைத்து வாசகர்களதும் பார்வைப் பேற்றினைப் பெற்றிருக்கின்றதென்பதை பலரதும் தொலைபேசி உரையாடல், நேரடி உரையாடல்களினூடாகவும், விசாரிப்புக்கள் வாயிலாகவும் தெரிந்து கொண்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுமையும், ஆளுகையுமுள்ள பல இலக்கியவியலாளர்களது மீள் எழுகைக்கு மணிப்புறா பூபாளம் பாடியிருக்கிறது. புதிய சிந்தனை நாற்றுக்களை பதியமிடத்துடிக்கும் இளையவர்களின் ஆர்வங்களுக்கும், குறிப்பாக மாணவச்செல்வங்களின் வரைவுகளுக்கும் மணிப்புறா தன் இறக்கைகளை எப்போதுமே விரித்த வண்ணமே இருக்கும்.

வினைத்திறனும், புதிய அகழ்வுகளை அறிமுகம் செய்யும் வேட்கையுமுள்ள ஆற்றலாளர்களின் களத்துமேடே மணிப்புறா என்பதை மீண்டும் நினைவு படுத்துகின்றோம்.

முதலிதழில் நாம் குறிப்பிட்டது போல எழுதத்துடிப்பவர்களுக்கு மட்டுமல்ல, எழுத்தியல் ஆய்வகழ்வுகளில் ஈடுபாடுள்ளவர்களுக்கும் களம் கொடுத்து வளர்த்தெடுக்க காத்திருக்கின்றது மணிப்புறா.

இன்றைய இலக்கியத் தேவை என்ன? அது எது சார்ந்ததாக இருக்க வேண்டும் என்று இனங்கண்டு இணைவு கொள்ளுங்கள். இலக்கியம் என்பது சாதனைப் படையலே. அப்படிச் சாதிக்கத் துடிக்கும் படைப்பாளர்களே!
மணிப்புறா உங்களது மாடப்புறா!

இலக்கியம் மானிடத்தின் மகோன்னத உணர்ச்சிகளை வரைகின்ற தூரிகை. புதிய கண்டு பிடிப்புக்கள் என்ற பெயரில் புரியாத சொற்கிடுகுகளைப் பின்னிக் கவிதையாக்கித் தர விழைவதையும் விட பரவலான மீள்வாசிப்புக்கேற்ற பதிவுகளை பொங்கியெழச்செய்யும் செயற்திறனுள்ளோரே உங்களது வெளியீட்டுக்களம், உயர்ந்ததளம் மணிப்புறா என்பதை மனதிற் கொள்ளுங்கள்.

மணிப்புறா பறந்த நாலாதிசைளிலும் மேலான வரவேற்பை நல்கிய அனைத்து உள்ளங்களுக்கும் தன் நன்றிமலர்களை சொரிகின்றன மணிப்புறா.
மீண்டும் சந்திப்போம் அடுத்தடுத்து......

மலரும் விஜய வருடத்தில் அனைத்து உள்ளங்களிலும் இன்பம் பெருக, மணிப்புறாவின் நல்வாழ்த்துக்கள்!

**பாவாணர் அக்கரைப் பாக்கியன்**
**ஆசிரியர்**
**மணிப்புறா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்முள் மறைந்து இருக்கும் தெய்வீகம்



அருட்சகோதரர் கலாநிதி.**S.A.I.**மத்தியு

தெய்வீகத்தைப் பற்றி பல ஞானிகளும், சித்தர்களும் கூறிச் சென்றுள்ளார்கள். தற்காலத்தில் ஞானம் கைவரப் பெற்ற சித்தர்கள் சிருஷ்டி கர்த்தாவோடு சகல சிருஷ்டிகளும் இறைதன்மை உடையன எனக் கூறினர்.

"எங்கெங்கு காணிலும் சக்தியடா
ஏழு கடலும் அவள் வண்ணமடா"

இது பாரதி தாசன்.

சித்தர் என்பது சித் என்ற அடியாகப் பிறந்தது. சித் என்றால் அறிவு ஞானம்.

**சத் சித் ஆனந்தம்**

என்பது சமஸ்கிருத மொழியில் இறைவனுக்கு கொடுக்கப்படுகின்ற பெயராகும்.

- சத் என்பது சத்தியம்
  சத்தியம் என்பது உண்மை
- சித் என்பது அறிவு ஞானம்

அதிலிருந்து சித்தம் என்பதைப் பெறுகிறோம். இறைவனின் சித்தம் என்கிறோம்.

- ஆனந்தம் என்பது இறைவன்
  இறைவனே பேரானந்தம்.

இக்கருத்தை ஒட்டியதே கிறிஸ்தவ வேத உச்சாரணம்.

**பிதா சுதன் தூயஆவி**

- பிதா என்பவர் சத்தியம்
  "இருக்கிறவர் நாமே", என்றார் இறைவன்
  (விவிலிய ஆகமம்)
- சுதன் என்பவர் ஆனந்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அச்சுதன் = அர்ச்சிக்கப்பட்ட = சுதன் அர்ச்சுதன் மேலும், அர்ச்சிய சிஷ்ட ஆனந்தமான என்ற கருத்தைத் தரும்)

– தூய ஆவி என்பவர் – ஞானம்

இறைவனை அடைந்து கொள்ள தூயஆவியின் வழிகாட்டல் தேவை.

இயேசு – இரட்சகர். இயேசு தம் வார்த்தைகளை நம்பியவருக்கு கொண்டு வந்த செய்தி "கடவுள் ஒருவர்" நாம் அவரின் பிள்ளைகள்.

தெய்வீகம் எல்லாரிடமும் உறைந்து வாழ்கின்றது என்பதாகும். மனிதன் ஒவ்வொருவரும் இந்தத் தெய்வீகத் தன்மையை உணர வேண்டும். எப்படி உணர்வது? இயேசு அடிக்கடி கூறும் பரலோக இராச்சியம் தத்தம் இதயத்திலே இருக்கின்றது என்பதை "அன்பு எனது உருவம், உண்மை எனது மூச்சு, நித்திய மகிழ்ச்சியே எனது உணவு" பரந்த வானவெளியை நாம் தெரிந்து கொள்ள வேண்டுமாயின் அதன் குணாதிசயத்தில் ஒன்று. அதன் சத்தம் அல்லது வார்த்தை. "வார்த்தை மனுவுரு ஆனார்" என்று கூறுகின்றது பரிசுத்த யோவான் எழுதிய வேதாகமம்.

ஓம் என்ற ரீங்கார மந்திரத்தை இந்து சமயத்தைப் பின்பற்றுபவர்கள் பயன்படுத்துகின்றனர். இதன் விரிவு அ, உ, ம் முதல் இடை கடை எனப் பொருள்பட்டு முதலில் இருந்தவன் இறைவனே, இடையில் இருப்பவனும் அவனே, இறைவனே, இறுதியில் இருப்பவனும் அவனே எனப் பொருள்படும். இறைவனுக்கு இன்னுமோர் பெயர் **அன்பு**. அதற்கு மற்றையச் சொல் சிவம்."ஓம் நமோ சிவாய" எனப் பொருள் பிரித்து இறைவனிலே இன்பம் காண் இருப்பவனும் அவனே என்றனர்.

திருவிவிலியம் இவ்வாறு கூறுகின்றது. இறைவனின் "உண்டாகுக" என்ற வார்த்தையால் அண்ட சராசரம் படிப்படியாக உருவாகின. நாம் ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு பெயரைக் கொடுக்கின்றோம். அதற்கு வார்த்தை என்கிறோம். மனிதன் என்ற வார்த்தை உன்னையும், என்னையும் குறிக்கின்றது. மரம் என்ற வார்த்தை முன்னால் நிற்கும் மரத்தைக் குறிக்கின்றது. கடவுள் என்ற வார்த்தை கடவுள் இருக்கிறார் என்பதை குறிக்கின்றது. கடவுள் இல்லாது விடில் இந்த சர்வ உலகமும் இல்லை. கடவுளின் சித்தம் இல்லாது விடின் இந்த உலகமே இல்லை. கடவுள் சித்தம் அன்பு, ஞானம். அது சக்தி. அதுவே இன்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவொரு கடவுள் ஒவ்வொருவரிலும் அடையாளமாக இருக்கின்றார். உன்னிலேயும் அந்த திருத்துவம் இருக்கின்றது. அதை தெய்வீக அம்சங்களில் அடையாளமாகக் காணும் போது அது உன்னில் மறைந்திருக்கும் தெய்வீகம்.

மனித உடலில் உள்ளடக்கப்பட்ட மூன்று முக்கிய அமிசம். இதயம், மனம், பேச்சு இவையே. தெய்வீக அடையாளம். இதயக் கடவுள் தத்துவத்தை உணர்த்தி நிற்கின்றது. இதுவே ஆத்மா. இந்த மனம் என்னும் ஆத்மா ஞானத்தின் ஆத்மா. இது தெய்வீகத்தையும், அன்பின் தத்துவத்தையும் உணர்த்துகின்றது.

கடவுள் கட்டுகளுக்கு அப்பாற்பட்டவர் அவரின் அன்பிற்கும் அளவில்லை.

**"அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்"**

ஆத்மா என்னும் இதயத்தில் இருந்தே மனம் வெளிப்படுகின்றது. அது அண்டசராசரத்தில் எல்லாவற்றையும் அடையாளம் இட்டு காட்டுகின்றது. அது கடவுளின் அகம் ஆகும். நான் என்பது தெய்வீகமாகக் கருதினால், உன்னுடைய எண்ணமும், செயல்களும் வழி தவறிப் போகாது. நான் என்பது ஆணவமாகக் கொண்டால் சுய அழிவு தானே வருகிறது. இந்த மனம் தூய்மை அடைகின்றது. தெய்வீகம் உடனடியாக அனுபவிக்கப் படுகின்றது. இயேசு மலைப் பிரசங்கத்தில் கூறினார். "தூய மனம் உடையோர் பாக்கியவான், ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்." தெய்வீகம் வேறுபட்டதல்ல. நீயே அது. இந்தத் தெளிவு உன்னில் வளர வேண்டும்.

தேவ அன்பு, தேவ சிநேகம், பாவத்திற்குப் பயம் அல்லது பச்சாதாபம் அல்லது ஒப்புரவு என்பது கருத்து சமூக ஒழுக்கவியல் கடைப்பிடிப்பு ஆகிய மூன்று தத்துவம் தெய்வீகத் திருத்துவம் போன்றது. தூய்மை, தூய்மையான வார்த்தை அது தூய செயலுக்கு வழிவகுக்கும்.

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனி இருப்பக் காய்கவர்ந் தற்று"

என்கிறது வள்ளுவம். கடவுள் உள்ளத்தில் இருக்கிறார் என்பதைக் கண்டுபிடிப்பின் எந்தப் பெருமுயற்சியும் இல்லாது எல்லாம் கை கூடும்.

திருவிவிலியம் கூறுகின்றது கடவுள் நம்மைத் தேடுகிறார். இதில் நம் சிந்தனையைச் செலுத்துவோம். கடவுள் எல்லாக் காலத்திலும் எங்கும் இருக்கின்றார். கடவுளை தேடுபவரைக் கடவுள் காண வேண்டும். கடவுள் எங்கே தேடுகின்றார் எதிலே எவரைத் தேடுகின்றார். உண்மைத்தனம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயநலம் இல்லாத தன்மை, ஒரே நிலை பக்திமான் ஆகிய குணாதிசயம் நிரம்பியவர்களைத் தேடுகின்றார்.

ஒரு ஊக்கம் உள்ள பக்திமான் அல்லது தீவிர பக்திமான் தாம் இறைவனோடு ஒன்றிணையும் அனுபவ மகிழ்ச்சியைப் பெறுகின்றார். சீனி இனிப்பானது. ஆனால், மலேரியா காய்ச்சல் உள்ளவனுக்கு அது கைப்பாக இருக்கும். இந்தச் சுவை அவனது நாக்கிலே தவிர சீனியில் இல்லை. இந்த வேறுபாடு உலக ஆசைகளில் மூழ்கி இருப்பவனுக்குத் தெய்வீக இனிமை தெரிவதில்லை, அதை அனுபவிக்க முடிவதில்லை.

பக்திமான் ஒருவன் ஓலமிடுகின்றான். கடவுளே! நீ என்னை மறந்து விட்டாயா? இது சாத்தியம் இல்லை. அவன், தான் கடவுளின் பிள்ளை என்பதையும் அவர் நல்ல வழிகாட்டி என்பதையும் மறந்து விடுகின்றான்.

இன்றைய மனிதன் கடவுளைத் தேடுகின்றான், கடவுளின் இயல்பைத் தேடுகின்றான். ஆனால், தான் முழுமை என்பதையும் கடவுளைத் தேடி உலகில் அலைந்து திரிவது வீண் என்பதையும் மறந்து விடுகிறான். கடவுள் நம் உள்ளத்திலேயே இருக்கின்றார். வேறு எங்கு நாம் போய் தேடுவது?

## சிந்திய மணிகள்

ஆசிரியர் "மணிப்புறா"

அன்புடையீர்! "மணிப்புறா" முதல் இதழ் கிடைத்தது நன்றி. சஞ்சிகை நன்றாக வடிவமைக்கப்பட்டுள்ளது. கட்டுரைகளும், சிறுகதைகளும் நன்று. உழைப்பை நம்பி, சித்தி முதலிய சிறுகதைகளும், நம்மொழி செம்மொழி, பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள். கட்டுரை முதலியன நன்று. மணிப்புறா விரைவில் இருமாத இதழாகி, காலக்கிரமத்தில் மாத சஞ்சிகையாக வளரவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

மூத்த எழுத்தாளர்
இரா. நாகலிங்கம் (அன்புமணி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கவிமணி நீலா பாலன்

கவிதை பற்றிய தேடல்கள் அதிகரித்துவிட்டன. கவிதை பற்றி அறியும் ஆர்வமும், ஆவலும் அரும்பத்தொடங்கிவிட்டன. எங்கு பார்த்தாலும்... கவிதா அமர்வுகள், கவிதா அரங்குகள், கவிதை பற்றிய கருத்தாடல்கள், ஆய்வகழ்வுகள் என்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஒரு மொழியின் சிறப்பான, உன்னதமான, உச்சங்களைத் தொடக்கூடிய, வித்தகமும் வினைத்திறனும் மிகுந்த படைப்பிலக்கியம் கவிதை. மானிடம் கண்டறிந்த எழுத்து வடிவிலான இசை கவிதை. எல்லோராலும் விரும்பப்படுகின்ற, விரும்பி ரசிக்கப்படுகின்ற இலக்கிய வடிவம் கவிதை.

ஆகவே அது பற்றி அறிதலும், தேடலும் அவசியம் என்பதை... இன்றைய சமூகம் புரிந்துகொண்டுள்ளது.

கவிஞன் ஒன்றி வாழுகின்ற சமூகத்தின் மையத்திலிருந்து, அங்கு வாழும் மக்களின் உணர்வு முனைகளிலிருந்து, பிறக்கின்ற இலக்கியமே... உயிர்ப்பையும், படிப்பவர்களுக்கோர் விழிப்பையும் ஏற்படுத்தும். சித்தாந்தங்களின் தெறிப்புக்களாகவில்லாமல், வாழ்வியல் அனுபவங்களாக கவிதை பிறந்து வரவேண்டும், அப்படியான அகழ்வுகளாக கவிதை இருந்தால்... வாசகன் அதைத் தேடிப்படிக்க விழைவான்.

தமிழ்மொழி... கவிதையால் அறியப்பட்ட மொழி, கவிதையோடு அறிமுகமான மொழி. உலகில் புழக்கத்திலுள்ள எந்த மொழிக்குமில்லாத சிறப்பு தமிழுக்குண்டு. தமிழ் மொழியின் ஒலியூடகம், பதிவூடகம் கவிதையே. சோதிடமா, வைத்தியமா, கணிதமா, வாழ்வியல் சூத்திரமா? அனைத்தையும் கவிதையாகவே பதிவு செய்திருக்கிறது தமிழ்மொழி. வசனம் என்கிற "விதந்துரைத்தல்" பல ஆண்டுகளுக்குப் பின்னர் தமிழ் மொழிக்குள் வந்து குடியேறிய இணை ஊடகம், கவிதையை விரித்துரைக்கும் துணை ஊடகம். தமிழ்மொழியில் புனையப்பட்ட கதைகள், வரலாறுகள் எல்லாம் குறுங்காவியம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுங்காவியம், காப்பியம் என்றே நமக்கு அறிமுகமாயின. சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், மகாபாரதம் என்னும் நெடுங்கதைகள் கவிதையாக வந்தே நமக்குக் கதை சொன்னவை.
இதிலிருந்து நாம் தெரிந்து கொள்வது... வசனமும், கவிதையும் வெவ்வேறானவை.
வசனம் கவிதையல்ல...
கவிதை வசனமல்ல...

கவிதைக்கு, கவிதை இலக்கியத்திற்கு... கட்டுப்பாடு, சட்டதிட்டம் அனைத்துமுண்டு. இந்தக் கட்டுப்பாடுகள் தளர்ந்து, தகர்த்தெறிந்து மீறிவெளிப்படும் அனைத்தும் கவிதையிலிருந்து வேறுபடுகிறது. கட்டுப்பாட்டோடு வருபவை மட்டுமே கவிதைக்குரிய பெறுானங்களோடு வருகின்றது. அப்படி வந்தவற்றை, மரபுக்கவிதையென்று வகைபிரித்தனர் தமிழ்ப் படைப்பியலாளர்கள். இப்படி மரபு என்று சொல்லப்படுவது... இலக்கண, இலக்கியம் மட்டுமுள்ளவையா..? அல்லது அதைவிடவும் வேறு காரணிகள் உண்டா?... உண்டு. மரபு என்பது இலக்கணம் மட்டுமல்ல.

மரபு என்பது... நமது முனைவர்கள், மூத்தவர்கள், முதிர்ந்தவர்கள், சேர்ந்து, சேமித்து வைத்திருக்கின்ற அனுபவங்கள். அந்த அனுபவங்களினூடாக தருகின்ற அறிவுறுத்தல்கள்., படைப்பாக்கவியலுக்கு எம்மைக் கூராக்கித் தயார் படுத்துகின்ற சாணைக்கல் அதுவே.

அவைதான்... எமது இலக்கிய வழிகாட்டி, அவைதான் எமது படைப்பிலக்கிய செல்நெறிக்கோவை. அந்த மரபின் அடிப்படையிலேயே, அதை அடியொற்றியே கவிதைகள் ஆக்கப்பட வேண்டும்.
உச்சரிக்கின்ற ஒவ்வொரு வார்த்தைக்கும் இலக்கணம் சொல்லுகின்ற மரபுமொழியை வளப்படுத்தியது, நெறிப்படுத்தியது. ஆகவே, அதுபற்றிய கற்றல் அவசியமானதே! ஆனால், இதுபற்றிய கற்றல் எத்தனை பேர்களுக்கிருக்கிறது? ஒன்றை அறியாமல், தெரியாமல்... அழித்துச் சிதைக்க வெடி கொழுத்தி வீசுவது சரியா?

மொழியின் உச்ச வார்த்தைகளைக் கொண்டு பின்னப்படும் கவிதை எம்மை ஸ்பரிக்கவில்லையென்று இன்றைய வாசகன் அலுப்போடு சொல்லுகின்றான். புரியாத, அர்த்தம் புரிந்துகொள்ள முடியாத அகழ்வுகளைப் புரிந்து கொள்ள கற்றல் தேவையென்றால்,... கவிதை, கற்றவர்களின் கலை என்று மீண்டும் ஆரம்பித்த இடத்திற்கே பயணப்படுகிறோமோ?...

இப்போது கவிதை வீரியமுள்ளவர்களோடு சேர்ந்து, கவிதை செய்பவர்களும் கவிதையைச் செய்துகொண்டிருப்பதால்... கவிதை அழைப்புச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயமுமையின்மையில் இடறிவிழ வேண்டிய நிலை வாசகனுக்கு. பயின்றும், பார்த்தும் கவிதை செய்து விடலாம் என்ற தவறான எண்ணங்களே நகல் கவிதையாளர்களின் பிறப்புக்கு ஏதுவாகின்றது. நகல் கவிஞர்களால்... நல்ல வீரியமுள்ள கவிஞர்களும் வாங்கிக்கட்ட வேண்டியிருக்கிறது.

இன்னும் சில கவிதை எழுதும் ஆர்வம் உள்ளவர்கள், சுவையாகச் சொல்லுவது, ஜனரஞ்சகமாகச் சொல்லுவதே கவிதையென்று எண்ணி சுவையாக, ஜனரஞ்சகமாகச் சொல்ல விழைந்து எதையெதையோ வெல்லாம்,.. அகம் புறம் என்ற பேதமின்றி கவிதையாகத் தர முயற்சிக்கிறார்கள். இதுவும் கவிதையின் சிறப்பை அசிங்கப்படுத்தி, கவிதையை அசுத்தமாக்குகிறது.

பயிற்சியின் மூலமோ... படிப்பின் மூலமோ பெற்றுக் கொள்ளும் மொழித் தேர்ச்சியின் மூலமோ கவிஞனாகிவிட முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இலக்கிய ஆய்வுகளாலும், கற்பனைகளாலும் உயிர்ப்புள்ள கவிதைகளை அகழமுடியாது, படைப்புச் சக்தியில்லாதவர்களால் வாழக்கூடிய கவிதைகளைத் தர முடியாது. இவைகளினால் கவிதை உயிர்ப்பிழந்தது.

கருத்தாக்கமும், கருத்தை உணர்த்துகின்ற படைப்பாற்றலும் சம்பந்தப்படும் போதே நல்ல கவிதை பிரசவமாகும். சிந்தனை, உள்ளடக்கம், அர்த்தம், உட்பொருள், பாடுபொருள், கருப்பொருள் என்று பல்வேறு பதச் சேர்க்கைகள் ஒன்றுபட்டு வெளியாவதே நல்ல கவிதை (Poetic idea is different from idea as ordinary understood)

கவிஞனின் அகமனப்பதிவுகளிலிருந்து மனவிளைவாக கவிதை கருவாகி உருவாக வேண்டும். புறயதார்த்தங்களை மட்டுமல்ல... அகயதார்த்தங்களையும் படைப்பாளி பிசைந்து ஆக்கமாகக் கொடுக்கவேண்டும்.

தாலியை அடகுவைத்து தளபாடம் வாங்கியும்
தோலிக் கருவாட்டுச்
சுண்டலோடு சாப்பிட்டும்
ஆடியிலே காடுவெட்டி
ஆவணியிலே வேர் பிடுங்கி

என்று சேனைப்பயிர் செய்வது பற்றி கவிஞர் பாண்டியூரன் சொன்னது போல...

மாடு மிதித்து மசிந்த வயற் சேற்றிடை
போடும் முளைநெல்லே பூமியொடும் ஒன்றாகித்
கூடினாற்போல் விழிகள் கூடிற்று
வேடுவன்கை அம்பு துளைக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ஆண்சிங்கம் வீழ்த்தப்பட்ட சங்கதிபோல்

என்று கவிஞன் நீலாவணன் காதலைச் சொன்னது போல கவிதைகள் வந்து வாசகனுக்கு யதார்த்தத்தைச் சொல்ல வேண்டும்.

ஒரு கவிதையின் தனித்தன்மைக்கும், உயர்வுக்கும், அந்தக் கவிதைகளில் அடைத்துக் கொண்டுவரும் கனமான, அர்த்தம் நிறைந்த சொற்களே காரணியாகும். இதையே "Electric charged Words" என்று மேனாட்டுத் திறனாய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.

ஒரு கவிஞன் சேகரித்துக் கொண்ட வாழ்வியல் அனுபவங்கள் எவ்வளவு தூரம் கலா பூர்வமாகவும், அறிவியல் ஒப்பீட்டோடும் வெளிப்படுகிறதோ அந்தக் கவிதை தனித்துவமே, ஆரோக்கியமே, ஒரு கவிஞனை இனங்காட்டக்கூடிய மச்சங்களாகும். செயற்கைத்தன்மை (Nonfiction) கற்பனாவாதம் குறையவேண்டும். மரபுக் கவிதைக்காக... எதுகைக்காகவும், மோனைக்காகவும் இட்டு நிரப்பப்படும் வெறும் சொல்லாடல் போல்... தேவையில்லாததையெல்லாம் தேவைக்கதிகமாகச் சேர்த்து "கவிதைக் குழம்பு" காய்ச்ச முயலக்கூடாது. சிந்தனையின் போக்கு, அல்லது வீச்சு உணர்வை மழுங்கடித்து விடக்கூடாது. பாடும் பொருள் பற்றிய தெளிந்த ஞானமும், விரிந்த பார்வையுமே ஒரு கவிஞனை இனங்காட்டும் திறன்களாகும்.

– இனியும் வரும் –

## சிந்திய மணிகள்

ஆசிரியர் அவர்களுக்கு,

மணிப்புறா கண்டேன், ஆனந்தம் கொண்டேன், அத்தனையும் முத்துக்கள், அறிவுமலர்க் கொத்துக்கள் சிற்றிதழ்களின் வரிசையிலே மணிப்புறாவின் வருகையானது மானுடத்தை சீர்செய்யும் என்னும் நம்பிக்கை எனக்குண்டு.

மென்மேலும் மணிப்புறா இலக்கிய வானிலே சிறகடித்து உயரஉயரப்பறக்க வேண்டுமென இதயபூர்வமாக வேண்டுகிறேன்.

எஸ்.பி. பாலமுருகன்
பதுளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீ(ர்)வுக்கு வழி காண்போம்!


சாய்ந்த மருதூர்
கே. எம். ஏ. அஸீஸ்

அன்பிற் குழைந்து, அறிவிற் செறிந்த
அழகிய நாடு இலங்கை, நற்
பண்பில் சமைந்து பாரில் உயர்ந்த
பௌத்தம் வளர்ந்த மண்ணில்
துன்பியல் முப்ப தாண்டுகள் தொடராய்..
தொல்லையில் மூழ்கியே இன்று
நின்றது, குண்டின் ஓசைகள். ஆனால்,
நிம்மதி இன்னமும் இல்லையே....!

நாற்பத் தெட்டில் பெற்ற சுதந்திரம்
நாலா திசையும் வீசும் எனப்
பார்த்தோம், ஆனால் பயனே இல்லை
பம்பர மாகவே மக்கள் தினம்
காற் பந்தாகியே அகதிக் கூண்டில்
கசியும் விழியிடை சிறையின்
மாற்றம் வேண்டிய கனவு இன்னும்
மாறுவ தெப்போ? சொல்வீர்

முக்கனிச் சாறாய், முகிழ்ந்த பௌத்தம்
முஸ்லிம், ஹிந்து கூறும் நற்
சர்க்கரை பிசைந்த சாறாம் அன்பு
சமுத்திரத்தில் மூழ்கி சகலரும்
பக்குவமாய் ஒருதாய் சேயென
பயணம் செய்யும் மண்ணாய்
தக்க வைத்தே தாய் நாட்டின்புகழ்
தரணி ஓங்கிடச் செய்வோம்.

இனியும் எமக்குள் இழுபறி வேண்டாம்
இணைவோம் பேதம் அறவே தீ(ர்)வில்
கனிவாய்... பணிவாய்.. கலந்துறவாடியே
கரம் கோர்த்தே எல்லோரும்
மனிதர் என்ற மாண்பினை இலங்கை
மாதா கண்டுளம் மகிழும் தூய
பணிகள் செய்தே பண்ணிசை பாடியே
பாரை வெல்வோம் வாரீர்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தலுக்காக செய்துவைத்திருந்த முகங்களை இன்னும் வைத்திருக்கிறார்கள் சில மனிதர்கள் தலையை வெட்டி எறிந்தாலும் வாலை ஆட்டிக் கொண்டே இருப்பேன் எனச் சபதமிட்டு, குரைக்கவும், கடித்துக் குதறவும் இன்னும் தயாராகவே இருக்கிறார்கள். நாய்களைக் காணும் இடங்களில் கொன்று விடுங்கள் என்று மாவோ இதனால்தான் கூறினார். அடிமைப் புத்தியை அடியோடு வெறுத்தவர் மாவோ. ஆனால், அமெரிக்கர்களுக்கு நாய் மிகப் பிரியமான ஒரு செல்லப்பிராணி. உயில் எழுதி வைக்கக் கூடிய அளவுக்கு நாய்களை அமெரிக்கர்கள் மதிக்கிறார்கள். நீ என்ன சொன்னாலும் தலையாட்டு வேன் என்பவர்கள் அமெரிக்கர்களுக்குத் தேவை பேசமுடியாத ஒரு இடத்திலிருந்து பிடுங்கி எடுத்தவை இக்கவிதை வரிகள்

கல்லூரன்

# பேசமுடியாத இடமிருந்து

துயரங்களை எழுத முடியாதபடி
கரங்கள் துண்டிக்கபட்டு
துடிக்கின்றன காண்.
எங்கோ ஒரு இடத்திலிருந்து
சொல்ல முடியாதபடி
வார்த்தைகளாகி வார்த்தைகளாகி
குருதி கசிகின்றது காண்.
கனவுகளும் எரிந்து தீய்ந்துபோன
ஒரு பயங்கரத்துள்
வீசப்பட்டு கிடக்கிறதென் இதயம்.

என் நினைவுகள் எதுவும் நுழையாதபடி
எவ்வளவு கவனமாக
தாள் பாள் போட்டுக் கொள்கிறார்கள்
எல்லோரும் -
முகவரியைத் தொலைத்து விட்ட
என் இருப்பிடத்தை நோக்கி
எப்படிச் செய்திகள் வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சிறு பூச்சியை நோக்கி
"இழந்து போகக் கடவது
அச்சிறு நிழலும்"
எனச் சாபமிட்டுச் சென்றனர்
சில தபசுகள்
விமோசனம் தேடி
பர்ணசாலை முழுவதும் அலைந்தாயிற்று.

வேடமிடும் வித்தைகள் தெரியாத
இப்பிரகிருதிக்கு
வெருளிகளும் உயிர்க்கும்
இம் மேதினி எதற்கு

யாருக்காக இந்தச் சிலுவை
யாருக்காக இந்த முள்முடி
உயிர்க் காற்று உள்ளவரை
இதயச் சமுத்திரத்திலிருந்து பீறிட்டெழும்
மாபெரும் அலைகளாகி
கரைகளை முட்டி மோதிக் கொண்டே
இருப்பேன் -
யாரையும் நோகாதபடி
எனக்கான என் தனிமைக்குள்!

**அன்பு நெஞ்சங்களே!**

உங்கள் எண்ணங்களை எங்கள் வண்ணங்களாய் தாங்கிவரும் மணிப்புறாவின் தடையற்ற பயணத்தின் உற்சாகத்துக்கும் உத்வேகத்துக்கும் உங்களால் முடிந்த ஆதரவையும் அன்பளிப்புக்களையும், உங்களிடமிருந்து மணிப்புறா எதிர்பார்த்து நிற்கின்றது.

(ஆ+ர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் சமூகமயமாதல் (கல்வி உளவியல்)



ஆ.உலகராஜா - தம்பிலுவில்

மனித வாழ்க்கையின் சிறப்பான படிமுறை வளர்ச்சிக்கு சமூகமயமாதல் மிகமிக அத்தியாவசியமான ஒரு தேவைப்பாடாகும். இந்த வகையில் கல்வி உளவியலை ஆய்வு செய்த பல்வேறு கல்வியியலாளர்கள் மாணவப்பருவத்தில் பிள்ளைகள் சமூக மயமாக்கல் நடவடிக்கையில் உள்வாங்கப்படும் போது, அவர்கள் எதிர்கால வாழ்நாட்கள் சிறப்பான முடிவுகளை சமூகத்திற்கு வெளியீடு செய்யும் என்பதை ஆய்வாளர்கள் வெளிப்படுத்தினர். எனவே, மாணவப்பருவ சமூக மயமாக்கல் என்றால், என்னவென்பதை நோக்கும் போது "பல்வேறு சந்தர்ப்பங்களில் நிகழ்ந்த சமுதாயச் செயற்பாடுகளின் விளைவாக சமுதாயத்திற்குப் பொருத்தமான சமூக நியமங்களைப் பெற்றுக் கொள்வதே சமூகமயமாதலாகும்" என வரைவிலக்கணப்படுத்தினர்.

சமூகமயமாதலானது ஒருவருடைய சூழலைப் பொறுத்தே அமைகின்றது. சூழல் விரிவடையும் போது சமூகமயமாதலும் விரிவடைகின்றது. சமூகமயமாதலானது குழந்தைப் பருவத்திலிருந்தே ஆரம்பமாகின்றது. ஒரு குழந்தையின் சமூகமயமாதலானது தன் தாயிடம் இருந்து தொடங்கி பின் பாடசாலைக்குச் செல்லும் போது அங்கு ஆசிரியர், நண்பர்களுடன் தொடர்புகள் அல்லது உறவுகள் ஏற்பட்டு விரிவடைகின்றது. அத்துடன், குழந்தையின் உடல், உள, மனவெழுச்சி என்பன வளர்ச்சியடையும் போது சமூகமயமாதல் விரிவடைவதுண்டு.

குழந்தைப் பருவத்திலிருந்து குமரப் பருவத்தை அடைந்ததும் அவர்களின் சமூகத்தொடர்புகள் விருத்தியடைகின்றன. அப்பருவத்தில் மகிழ்ச்சி தரும் சகபாடிகளின் குழுக்களோடு சேர்ந்திருப்பதையும், மகிழ்ச்சிதரும் பிரயாணங்களை மேற்கொள்வதையும் விரும்புவார்கள். இச்சந்தர்ப்பங்கள் அவர்களின் சமூகமயமாதலுக்குத் துணைபுரிகின்றன. இப்பருவத்திலே உளவளர்ச்சி ஏற்படுவதால் சுயமதிப்பும், சமூகக் கட்டுப்பாடும் ஏற்படுவதுடன் சுதந்திரமான தீர்மானங்கள் மேற்கொள்ளவும் செய்கின்றனர். இவ்வாறான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பங்களிலெல்லாம் பெறப்படும் ஒழுங்கான பயிற்சி சமுதாய வளர்ச்சிக்கு மேலும் மெருகேற்றுகின்றன. அத்துடன் பொதுநலம், நடை, உடை, பாவனை, ஒழுங்குகள் என்பன சிறப்படைந்து சமூகமயமாக்கப்படுகின்றன.

மேலும், நவீன முறையிலான தொடர்பு சாதனங்கள், தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகைகள், இன்ரநெற், ஈமெயில் மற்றும் வேறு தொலைத்தொடர்பு சாதனங்களினாலும் சமூகமயமாக்குதல் இலகுவாக மேற்கொள்ளப்படுகின்றன. பொதுவேலைகள், விளையாட்டுப்போட்டிகள், சிரமதானம், குழுச்செயற்பாடுகள், கல்விச் சுற்றுலாக்கள் என்பவற்றின் மூலமும் தலைமைத்துவம், நடுநிலைமை வகிக்கும் தன்மை, ஒற்றுமை, சமமாகப்பழகும் தன்மை, ஆண், பெண் இருபாலாரிடமும் சுமுகமான உறவு என்பன ஏற்பட்டு சமூகமயமாதல் ஏற்படுகின்றது.

மேலும், சமூகமயமான ஒரு மாணவனிடம் அல்லது ஒரு நபரிடம் காணப்படும் சில பண்புகளை நோக்கும் போது இவர்

1. சமூகத்தோடு ஒத்திசையும் தன்மை
2. சுயநலமின்றி பொது நலத்துடன் சமுதாயத்துடன் செயற்பாடுகளில் ஈடுபடல்.
3. ஏற்றத்தாழ்வின்றி சமத்துவத்துடனும், அன்புடனும் எல்லோரிடமும் பழகும் தன்மையைக் கொண்டிருத்தல்
4. பிறர் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல்
5. வெற்றி தோல்விகளை சமமாக மதிக்கும் தன்மை
6. வயதில் மூத்தவர்களை மதித்து அவர்களுக்கு உதவுதல்
7. ஆண் பெண் இருபாலாரும் ஒருவரை ஒருவர் மதித்து சமமாகப் பழகுதல்.
8. பிரச்சினைகள் எழும்பட்சத்தில் அவ்விடயங்களைக் கலந்துரையாடல் மூலம் அணுகுதல்
9. பொறுப்புக்களை முன்வந்து ஏற்று இயன்றவரை சிறப்பாக நடத்தி முடித்தல்
10. மற்றவர்க்கு சிறந்த வழிகாட்டியாக இருத்தல்.
11. தமது கடமையை மற்றவர்களின் ஊக்குவித்தலின்றி மிக சிறப்பாகவும் சீரானதாகவும் செய்தல்.
12. எந்த செயற்பாட்டிலும் பொறுமையும், நிதானமும் கடைப்பிடித்தல்.
13. உற்சாகமும், ஊக்கத்துடனும் பொதுவேலைகளில் பங்குபற்றல்.
14. ஆன்மீக அல்லது அறநெறி உணர்வுடன் செயற்படல்.
15. சேவை மனப்பாண்மை கொண்டிருத்தல்.
16. நடுநிலையாக நின்று செயற்படுதல்.
17. தலைமைத்துவத்திற்கு கீழ்ப்படிந்து செயலாற்றுதல்
18. எவ்வித செயற்பாடுகளிலும் ஒழுக்க மேம்பாட்டைக் கடைப்பிடித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. பரந்த மனப்பாங்கு, அறிவுடனும் செயற்படுதல்
20. பொதுச்சொத்துக்களை தனது சொந்தச் சொத்துக்களைப் போல் பேணுதல்
21. சுய கட்டுப்பாடும் சுய நம்பிக்கையுடையவராகவும் இருத்தல்.

எனவே மேற்கூறிய விடயங்களை எல்லாம் நோக்கும் போது "சமூகமயமாதல்" என்றால் பல்வேறு சந்தர்ப்பங்களில் நிகழ்கின்ற சமுதாயச் செயற்பாடுகளின் விளைவாக சமுதாயத்திற்குப் பொருத்தமான நியமங்களைப் பெற்றுக்கொள்வதே "சமூகமயமாதல்" எனலாம்.

– இனியும் வரும் –

# எமது நிலை...

அக்கரை மாணிக்கவாசகம்



எல்லா வகையிலும் நாம்
எழுதி வைத்தோம்
எமக்கு மட்டுமே தான் அது
விளங்குகிறது...

புரியுமளவிற்கு அதனை
புரியவைத்திடவே
மொழி பெயர்ப்பு எனும்
அறுவை சிகிச்சை
நடத்தினாலும் அதைச்
செய்கின்றவர்க்கே
சிலவேளை சிலவன
விளங்குவதாயில்லை...

நாங்கள்
தொலைத்து விட்டது
நிம்மதியை மட்டுமல்ல
மொழி முகவரி உயிர்
வாழ்விடம்
மனிதனென்ற நிலை
சுதந்திரத்தையும் கூட...

அந்நியரல்லவே நாம்
அந்நியராக்கப்பட்டோம் - இங்கு
சிலரினது கோணல்
பார்வையிலின்று நாம்
வல்ல அரசுகளினது
வாரிசுகளாகவே
வாரிசுகளாகவே
தென்படுகின்றோம்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– சிறுகதை –

# தொட்டதும் விட்டதும் கெட்டது!



புதுமைவாணன்

கார்த்திகா தன் கைகளை ஒனறோடு ஒன்று கோர்த்து இரு கால்களையும் மார்போடு கட்டிய ணைத்தவாறே கட்டில்மேல் குந்திக்கொண்டிருந்தாள். வெள்ளம் முடிந்தும் வீதிபடிந்த சேறுபோல அவள் கண்களினால் வழிந்தோடிய கண்ணீர் அவள் சோகத்தைக் காட்டியது. வேலிச்செவிகளெல்லாம் அவள் வீட்டுப்பக்கமே திரும்பி இருந்தன. இணையத்தின் வேகம் போலே செய்தி அக்கரைப்பற்று வீதியெங்கும் வேகமாகப் பரவத்தொடங்கியது.

கார்த்திகாவின் அண்ணன் கார்த்திகேசுவுடைய கண்களின் நரம்புகளெல்லாம் வெள்ளைமணணில் ஓடிய சிவப்பு நதியாக காட்சியளித்தன. அவனது ஆத்திரம் நியாயமானதுதான். தன் கைக்குள் பொத்தி வளர்த்த பொக்கிசம், பொறிக்கியொருவனின் பொய்யான வலையில் சிக்கிச் சீரழிந்துவிட்டதே என்ற ஏக்கம் தன்னைத் தாக்கத் தொடங்கியது.

"அவன் இப்ப எங்க இருக்கான்? என்னயப் பத்தி அவனுக்குத் தெரியுமா? அவண்ட மண்டைய ஒடைக்கிறதுக்கு.." என்று தாவாரத்தில் கிடந்த கோடாலிப்பிடியினைத் தூக்கினான்.

அதனைக் கண்டதும் அத்தனை ஆத்திரமான வார்த்தைகளையும் அமைதியாய்க் கேட்டுக்கொண்டிருந்தவள் அண்ணனின் காலில் ஓடிவந்து விழுந்து கிடந்தாள். அவள் கண்களில் இருந்து கண்ணீர் பெருகி அவனது கால்களை அபிசேகம் செய்துகொண்டிருந்தது. தவித்து அழும் தங்கையின் தலையைப் பிடித்து நிமிர்த்தி "காத்திகா அவண்ட தலய ஒடச்சாத்தான் எண்ட ஆத்திரம் அடங்கும். என்ன விடு, நான் போப்பறன்." "இல்லடா அண்ணா அவரத் தேடிப் போகாத" என்றவாறு தன் இருமாத வயிற்றைத் தடவிக்கொண்டு எழுந்தாள். சிவந்த கண்களின் ஓரம் நீர் கசிய, கையில் இருந்த கம்பு நிலத்தைத் தொட்டு முத்தமிட்டது. இவை அனைத்தையும் வாயடைத்தவளாய் வாசலோரம் நின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலாமரத்தில் தலைசாய்த்து செய்வதொன்றும் புரியாமல் குற்றம் செய்த குழந்தைபோல கண்களைக் கசக்கிக்கொண்டு நின்றாள் அந்தக் கார்த்திகாவின் தாய்.

இத்தனை கலக்கத்திற்கும், உறக்கத்திற்கும், ஊரவர் வாய்களில் உலாவிவரும் விடுப்பிற்கும் காரணம் கனவுபோல நடந்து முடிந்த அந்தத் திருமணம்தான். குறையொன்றும் இல்லாமல் மிகக் கோலா கலமாக ஊரார், உறவினர் என பலரையும் அழைத்து ஒரேயொரு பெண்பிள்ளையான கார்த்திகாவினதும், தன்னந்தனியாக இருந்த சேகரினதும் திருமணம் நடந்தேறியதுதான்.

அந்த அதிர்ச்சியான சம்பவத்திற்கும் அத்திருமணத்திற்கும் இடையில் வெறும் நான்கு மாதங்கள்தான் நகர்ந்திருந்தது. இரு மனமும் இணைந்து இன்புற்று வாழும் இல்வாழ்வில் இப்படியொரு இடிவிழுவது தகுமா?

சேகர் ஒரு வாட்டசாட்டமான கட்டுடலும், வேலை தவிர்ந்த வேளைகளில் கசங்காத உடையழகும் உடையவன். மேசன் வேலைக்காக கார்த்திகாவின் வீட்டுக்கு வந்திருந்த வேளையில்தான் அவன் அக்குடும்பத்திற்கும், அவளுக்கும் அறிமுகமானான். பேச்சில் பிஞ்சுக் குழந்தைகள்போல பிறரை மயக்குவபன். அவனைக் கார்த்திகாவின் குடும்பத்திற்கு மிகவும் பிடித்திருந்தது.

"ஏப்பா சேகரு நீ கல்யாணம் கட்டியிருக்கியா? எத்தனை புள்ளையல் என்று" சேகரிடம் கேள்விமேல் கேள்விகளைத் தொடுத்தாள் கார்த்திகாவின் தாய்.

பதிலுக்கு "இல்லம்மா இன்னும் கல்யாணம் கட்டல இனித்தான் கட்டனும். எனக்கு இதலாம் பத்தி யோசிக்க யாருமில்ல. நான் ஒரு அனாத. நானாத்தான் ஒரு பொண்ணத் தேடனும்" என்று கதையை நீட்டிக்கொண்டு போனான்.

தன் பிள்ளைக்குத் தான் இறப்பதற்கு முதல் ஒரு நல்ல மாப்பிள எடுக்க வேண்டும் என்று கவலையோடு இருந்தவளுக்கு இவனது கதையைக் கேட்டதும் ஆறுதல் கிடைத்தது. இவனைத் தன் மகளுக்கு மாப்பிள்ளை கேட்டுப்பார்ப்போம் என்று மனதில் நினைத்துக்கொண்டு தனது மகனிடம் இவைபற்றிக் கதைக்க எண்ணிக்கொண்டிருந்தாள். மாலைச் சூரியன் மறையத் தொடங்கியதும் மகளது திருமணம் பற்றிய கற்பனைகளை அதிகரித்துக்கொண்டு வேலைவிட்டு வந்த தன் மூத்த மகனிடம் தனது எண்ணங்களைக் கொட்டிக் குவித்து மகனது தீர்மானத்திற்கு காத்திருந்தாள்..

"ஊர் பேர் தெரியாத ஒருவனையா கட்டிக் குடுக்கிற.. அவளுக்கு உதவிக்கு ஒரு சொந்த பந்தமில்லாதவனக் கட்டிக்குடுத்தா அவள் பின்னுக்கு என்ன செய்வாள்...."

என்று தன் கேள்விக்கணைகளைத் தொடுத்தான். "சரிடா இப்ப ஒரு மாப்பிள எடுக்கிறன்டா கொறஞ்சது பத்து லெச்சமெண்டான சீதனம் குடுக்கணும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதலாம் குடுக்க இப்ப நம்மல்ட்ட எங்கரிக்கி காசி?" என்று மாறிமாறி விவாதம் நடைபெற்ற பின்னே,

"தம்பி சேகர் ஒண்டு கேப்பம் கொற நெனைக்க மாட்டியே?"

"இல்லம்மா நான் ஒன்டும் நினைக்கமாட்டன் கேளுங்க"

"எங்கட புள்ளயக் கட்றயா? புள்ளைக்கு நகையும், இருக்க வீடும் தாறம்"

சேகர் எந்த நோக்கத்திற்காக அங்கு அலைந்தானோ அந்த நோக்கம் நிறைவேறப்போவதை எண்ணி ஆனந்தக் கடலில் மிதந்தான். ஆனாலும், தனக்கு உடனே பிடிக்காதவாறு தயங்கிவிட்டு, சற்றுத் தாமதமாய்த் தலையசைத்துச் சம்மதம் சொன்னான். பின்னர் தான் பாண்டிருப்பிலே உறவென்று பழகிய பத்துமாச்சி பற்றிக் கதைத்து அவரிடம் இது பற்றிக் கதைக்க வருமாறு தயவாய்க் கேட்டுக்கொண்டான்.

அவனது அந்த நல்ல பண்பைப் பார்த்து கார்த்திகாவின் அம்மா அன்னலெட்சுமி ஆனந்தமடைந்தாள். தனது பிள்ளைக்கு நல்ல மாப்பிள்ளை கிடைத்துவிட்டதாக போலிமேல் நம்பிக்கை கொண்டு அடுத்தநாள் சேகருடன் பாண்டிருப்புக்கு புறப்பட்டாள்....

பாண்டிருப்பு... கடலும், வயலுமென இருகரைகொண்ட அழகிய கிராமம். இங்குதான் சூதால் துரியோதனிடம் நாட்டை இழந்த பாண்டவரின் கதைபாடும் கிழக்கில் புகழ் பெற்ற திரௌபதை அம்மன் ஆலயம் அமைந்துள்ளது. ஆண்டுதோறும் அக்கதையை அங்குள்ளவர்கள் கேட்கின்றபோதிலும் ஆலயத்தின் வெளி வீதிகளில் நீண்டுகிடக்கின்ற ஆலமரங்களின் கீழ் சூதாடிக்கொண்டுதான் இருக்கின்றார்கள். அவ்வாறு சூதாடும் சூதாட்டக்காரர்களில் ஒருவன்தான் சேகர் எனத் தன்னை மாற்றிக்கொண்டுள்ள மதிமாதன்.

மதிமாதனுக்கு தரம் 10, தரம் 8 படிக்கின்ற இரு பெண் குழந்தைகள் இருக்கின்றனர். அவனது மனைவி சுஜித்தா மிகவும் வறுமைக்கு மத்தியில் மரியாதையாக வாழ்ந்தவள். அவளது ஏழ்மையைக் கண்டு இரங்குவது போல நடித்துக் காதல்செய்து ஆசைக் கதைபேசிக் கரம்பிடித்துக்கொண்டான். இருவரது காதலின் உச்சத்தில் உருவான பெண்குழந்தைகள்தான் அவை. வயதுக் கோளாறில் திருமணம் முடித்துக்கொண்ட அவனுக்குக் குடும்பப் பாரத்தைச் சுமக்க முடியாமல், மனைவி பிள்ளைகளோடு சண்டையிட்டுக் குடிப்பதற்கும், சூதாடுவதற்கும் வீட்டில் உள்ள பொருட்களை விற்பதும், மனைவி பிள்ளைகள் மறுத்தால் அவற்றைப் போட்டு உடைப்பதுமென அட்டூழியம் பல செய்தான்.

தொடர்ந்துகொண்டிருந்த அவனது கொடுமைகளை பொறுத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ள முடியாமல் தன்பிள்ளைகளோடு தனியாகி தன்பிள்ளைகளுக்காக மருத முனையைச் சேர்ந்த தனியார் ஒருவரது தறிமாலில் தினம் போராடிக் கொண்டிருக்கிறாள். அவளது நிலை இவ்வாறிருக்க நெய்யப்போகும் போது நெஞ்சமற்ற சில வஞ்சகர்கள் கதைக்கும் அவதூறான கதைகள் அவள் காதைக் கல்லில் உளி பாய்வது போல துளைக்கும். பெண்களைப் பழிசொல்லிப் பழக்கப்பட்டவர்களுக்கு நாக்கு சும்மாவே இருக்காது. ஒன்றை இரண்டாக்கும் பின்னர் இரண்டை எட்டாய்ப் பெருக்கிவிடும்.

அவ்வாறு வந்த சில அவதூறான கதைகளில் சிலவற்றைத்தான் தாங்கள் பிரிந்ததிற்கு காரணமாக அடுத்தவர் காதுகளில் அலசிக்கொள்வான். இவ்வாறு மதிமாதனின் முதல் வாழ்க்கை அலையில் பட்ட இலைபோல அல்லாடிக் கொண்டிருக்கையில்தான் அவன் அக்கரைப்பற்றுக்குப் போயிருந்தான். குடிபோதைக்கும், சூதுக்கும் அடிமையாக இருந்த அவனுக்குத் தன்தேவையைப் பூர்த்திசெய்துகொள்ள யாரையாவது பணக்காரப் பெண்ணைத் திருமணம் முடிப்பதில் குறியாயிருந்தான். அதற்கு ஒரு உழைப்பாளிபோல், அநாதைபோல் பொய் வேடம் பூண்டிருந்தான்.


சேகரின் உண்மை முகம் அறியாத கார்த்திகாவின் தாய் சேகர் தன் உறவென்று சொன்ன பத்துமாச்சியிடம் வந்து சம்மதம் கதைத்து திருமணத்திற்கு தேதியும் குறித்தெடுத்துப் போனாள். பத்துமாச்சி பணத்திற்காக பலதும் செய்யக் கூடியவள் என்பதை சிறிதும் அறிந்திருக்கவில்லை அந்த அக்கரைப்பற்று அம்மா.

தனது அம்மா, அண்ணன் பார்த்துமுடிக்கின்ற திருமணம் என்பதால் அதில் பழுதிருக்காது என்று நம்பி கார்த்திகா திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்திருந்தாள். திகதி நெருங்கிவர முகூர்த்த நாளில் திருமணமும் நடந்துமுடிந்தது. இல்லறவாழ்வில் இருவரும் இவ்வுலகை மறந்திருந்தனர். பால் அருந்தி பலதும் முடிந்துவிட நான்கு மாதங்கள் நகர்ந்தபின் தான் ஊற்றிய பால் ஒரு கொடிய விசப்பாம்பிற்கு என்பதை அங்கு தன் கணவனைத் தேடிவந்த அவனது மூத்த மனைவியின் உறவினர்கள் மூலம் தெரிந்து கொண்ட கார்த்திகா தனக்கு துரோகம் செய்து வயிற்றில் குழந்தையையும் தந்துவிட்ட சேகரைக் கைவிடுவதா? இல்லை தீர விசாரிக்காமல் திருமணம் செய்து வைத்த அம்மாவையும், அண்ணனையும் எண்ணிக் கோபப்படுவதா என்றும், எல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னைப்போல தவித்துக்கொண்டிருக்கின்ற சுஜித்தாவையும், பிள்ளைகளையும் எண்ணி மனம்வருந்துவதா என்றும் பல ஏக்கங்களுடன் காட்டில் பாதை மறந்து தவிக்கும் தனி மானைப் போல தத்தளித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு கல்லடி புதிய பாலம்



அகரம்
செ. துஜியந்தன்

இலங்கையின் வரலாற்று சிறப்புமிக்க நகரங்களில் கிழக்கிலங்கையின் மட்டக்களப்பு நகருக்கு என்று தனிச்சிறப்புக்கள் பல உண்டு. "மீன்பாடும் தேன் நாடு" என வர்ணிக்கப்படும் மட்டக்களப்பில் இயற்கை அழகுகளுக்குப் பஞ்சமில்லை. அந்த வகையில் இலங்கையின் மிகப்பெரிய வாவியான மட்டக்களப்பு வாவி வங்கக்கடலோடு சங்கமமாகும் இடத்தின் அயலில் அமைந்திருக்கும் கல்லடிப்பாலமும் மட்டக்களப்பு நகருக்கு மேலும் அழகு சேர்க்கின்றது.

கிழக்கையும், தெற்கையும் இணைக்கும் மிக முக்கிய பாலமாக கல்லடிப்பாலம் அமைந்துள்ளது. இப்பாலம் 1920 ஆம் ஆண்டளவில் ஆங்கிலேயரினால் இரும்பு கேடர்களைக் கொண்டு அமைக்கப்பட்டிருந்தது. அப்போது 50 வருட கால உத்தரவின் பேரில் நிர்மாணிக்கப்பட்ட இப்பாலம் அதன் கால வரையறையையும் தாண்டி சுமார் 92 வருடங்களாக ஒரு வழிப்பாதையாகவே இருந்து வந்துள்ளது.

இப்பாலத்தின் முக்கியத்துவம் பற்றியும், இப்பாலம் புனரமைக்கப்பட வேண்டிய அவசியம் அல்லது புதிய பாலம் நிர்மாணிக்கப்பட வேண்டிய தேவை பற்றியும் பொதுமக்களினாலும், பல்வேறு தரப்புக்களினாலும் காலத்திற்குக் காலம் வரும் அரசாங்கங்களிடம் கோரிக்கைகள் விடுக்கப்பட்டே வந்துள்ளது. இருந்த போதிலும் அவை எதுவும் கருத்தில் எடுக்கப்படவில்லை.

தற்போது நாட்டில் யுத்தம் ஓய்ந்து, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசின் கீழ் பல்வேறு அபிவிருத்திப்பணிகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக வீதி அபிவிருத்திகள் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கமையவே மட்டக்களப்பு மாவட்டத்தின் வரலாற்று சிறப்புமிக்க கல்லடிப் பாலத்தின் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இன்று மட்டக்களப்பு கல்லடிப்பாலம் 1970 மில்லியன் ரூபா செலவில் 289 மீற்றர் நீளமும் 14 மீற்றர் அகலமும் கொண்டதாக நிர்மாணிக்கப்பட்டு புதுப் பொலிவுடன் காட்சி தருகின்றது. அதன் மூலம் இதுவரை காலமும் கிழக்கிலங்கை மக்கள் எதிர்நோக்கிய போக்குவரத்து சிக்கல்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இப்புதிய பாலத்தின் திறப்பு விழா கடந்த மார்ச் மாதம் 22ம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்லடிப் பாலத்திற்கு புதுப்பொலிவு கிடைத்தது போல், இங்குள்ள அனைத்து மக்களும் சமாதானமாகவும், சந்தோசஷமாகவும், வறுமையற்றவர்களாகவும் நிறைவான வாழ்க்கை வாழ்வதற்கு பிறக்கும் புத்தாண்டிலாவது அரசாங்கம் வழியேற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

# வீதி விபத்துக்கள்

## பற்றிய விபரம்



இலங்கையில் வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளது. இதனால் அநியாயமாக பலர் உயிரிழைக்கின்றனர். நாள் ஒன்றுக்கு 5பேர் வீதம் உயிரிழைக்கின்றனர். கடந்த 2012ஆம் ஆண்டில் மட்டும் 40460 வாகன விபத்துக்கள் இடம்பெற்றுள்ளது. இதில் 2263 பேர் உயிரிழைத்துள்ளனர். 20701 பேர் காயம் அடைந்துள்ளனர். இதே வேளை 2013 ஜனவரி தொடக்கம் மார்ச் வரையிலான காலப்பகுதியில் 9815 வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளது. இதில் 628 பேர் உயிரிழந்தும் 1380பேர் காயம் அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறப்பும் இறப்பும்



லக்ஷ்மி பிரியன் - பெரியநீலாவணை

பிறப்பைப் பற்றிய இரகசியங்கள் இந்துமதத்தில் நிறையவே உண்டு. பழுதுபட்ட துணியைக் களைந்துவிட்டு புதியவைகளை அணிந்து கொள்வதைப்போல் பழைய உடலை நீக்கிவிட்டு புதிய உடலை எடுக்கிறது ஆன்மா — கீதை 2 — 22 இப்படியாக மறுபிறப்பைப் பற்றி நிறையவே கூறுகிறது கீதை. இதைப் பௌத்த மதமும் ஆமோதிக்கிறது. வெளிநாட்டு அறிஞர்கள் இந்த மறுபிறப்பைப் பற்றி ஆராய்ந்து இது உண்மை என்று தெட்டத்தெளிவாகக் கூறியுள்ளனர்.

புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்மிருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய் பேயாய்க் கணங்களாய்
வல்ல சுர ராகி முனிவராய்த் தேவராய்...
எல்லாப் பிறப்பம் பிறைந்திழைத்தேன் என் பெருமான்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பாடுகிறார் மாணிக்கவாசகர். பிறவியின் விபரம் வெளிக்கொணரப்படுகிறது. முனிவர்கள் சித்தர்கள் – ஞானிகள் எல்லாம் இந்த மறுபிறப்பைப் பற்றி நிறையவே கூறியிருக்கிறார்கள்.

இது இப்படியிருக்க

சிவவாக்கிய சித்தரின் ஒரு பாடல் சிந்தனையைத் தூண்டுகிறது.

"கறந்த பால் முலைப் புகா கடைந்த வெண்ணெய் மோர் புகா
உடைந்து போன சங்கிலியின் ஓசை உயிர்களும் உடற் புகா
விரிந்த பூ உதிர்ந்த காயும் மீண்டும் போய் மரம் புகா
இறந்தவர் பிறப்பதில்லை இல்லை இல்லை இல்லையே"

மறுபிறவி என்பது கர்ம வினையோடு தொடர்பானது.

கோயில்களிலே பாதணிகளைத் திருடுபவர்கள் – நகைகளைத் திருடுபவர்கள் அடுத்த பிறவிலே அதே கோயிலில் சப்பாணியாக அமர்ந்து பிச்சை ஏற்று நிற்கின்றார்கள். தெய்வங்கட்கும் – மனிதர்கட்கும் தொண்டு செய்து தான தர்மம் செய்து சிறப்பாகவாழ்பவர்கள் அடுத்த பிறவியில் பிறக்கும் போதே செல்வத்தை அனுபவிப்பர்.

இது அசைக்க முடியாத உண்மை.

ஆனால், சில மாற்றுச்சமயத்தவர் தங்கள் மதப்பிரச்சாரத்தின் போது இந்து சமயத்திலேயும் மறு பிறப்பு என்பது இல்லை என்று கூறி அதற்கு ஆதாரமாக இந்தப் பாடலைக் கூறுகின்றனர்.

இது எவ்வளவு தவறான பொருட் கோடல்.

அந்தக் காலத்தில் பாடல்களை ஏட்டிலேதான் எழுதினார்கள். அதை மீண்டும் பார்த்து எழுதுகின்ற போது பிழை விட்டிருக்கலாம். இறந்தவர் பிழைப்பதில்லை என்றுதான் அவர் பாடியிருக்க வேண்டும். அதை ஏட்டிலே எழுதுகின்ற போது பிழைப்பதில்லை என்பதற்குப் பதிலாக பிறப்பதில்லை என்று எழுதியிருக்கலாம்.

இதை எழுதிய சிவவாக்கியரின் பிறந்த இடம் – காலம் போன்ற எந்த விபரமுமே தெரியவில்லை. சிவவாக்கியம் என்பது கூட அவரது இயற்பெயரல்ல. இவர் காப்புச் செய்யுளில் "சொல்லவேன் சிவ வாக்கியம்" என்று பாடியதன் காரணமாகவே இவரைச் சிவவாக்கியர் என்று அழைத்தனர்.

இவற்றைப் பார்க்கின்ற போது இவர் பிழைப்பதில்லை என்றே பாடியிருக்க வேண்டும். அதை மீண்டும் எழுதுகின்றபோது பிறப்பதில்லை என்றே எழுதியிருக்க வேண்டும் என்பதே சரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதத்துக்கு எதிராகப் பிரச்சாரம் செய்பவர்கள் அவர் "பிறப்பதென்பது இல்லையே" என்றுதான் பாடியிருக்கிறார். எனவே மறுபிறப்பு என்பது வாதித்தாலும் அதுவும் சரியே!

ஒரு பாடசாலையில் பல வகுப்புக்கள் உண்டு. மாணவரின் தராதரத்துக்கு ஏற்ப வகுப்புக்கள் அமைகின்றன. இரண்டாம் ஆண்டு மாணவனுக்கு பத்தாம் ஆண்டு கல்வியைப் புகட்டினால் அவனுக்கு எதுவும் விளங்காது.

அது போல மனித வர்க்கத்திலேயும் பல தரங்கள் உண்டு. சாதாரண மனிதர்களில் இருந்து ஞானிகள் வரையும் தரங்களால் பிரிக்கலாம். அதிலே இந்த சிவ வாக்கியர் ஞான நிலையிலே உள்ளவர். எனவே அவரைப் பொறுத்த வரையில் அவருக்கு மறுபிறப்பு இல்லை என்பதே உண்மை.

மேலும் அவர் பிறப்பைப் பற்றிக் கூறுகையில் வேறொரு பாடலில்

"எப்பிறப்பிலும் பிறந்து இறந்து அழிந்த ஏழைகாள்

இப்பிறப்பிலும் பிறந்து என்ன நீறு பூசுநீர்" என்று பாடுகின்ற போது இறந்தவன் மீண்டும் பிறப்பான் என்ற கருத்து அங்கே உண்டு. சரி கீதை என்ன சொல்கிறது?

"எனது திவ்விய பிறப்பையும் செயலையும் உள்ளபடி அறிபவன் மீண்டும் பிறப்பதில்லை" (கீதை 4–11)

"பக்குவப்பட்ட பரமாத்மாக்கள் என்னை அடைந்த பின் மறு பிறப்பு எடுப்பதில்லை" (கீதை 8–15)

இப்படியாக யாருக்கு நிறையவே மறுபிறப்பு உண்டு, யாருக்கு மறுபிறவி இல்லை என்ற விபரம் கீதையில் தெளிவாக உள்ளது. இவையனைத்தும் சிவவாக்கியரின் பாடலுடன் ஒத்துப் போகிறதல்லவா?

அபிராமிப்பட்டரும் அடியேன் இறந்து இங்கு இனிப் பிறவாமல் வந்து ஆண்டு கொள்ளே என்றும், சரணம் சரணம் என நின்ற நாயகி தன்னடியார் மரணம் பிறவி இரண்டும் எய்தார் இந்த வையகத்தே என்று மிகத் தெளிவாகவே பாடுகிறார். எனவே, மறுபிறவி என்பது உண்டு. அதை அவரவர் கர்மம் தீர்மானிக்கிறது. சிவவாக்கியரின் பாடலைத் தவறாகப் பொருள்கோடல் செய்வது தவிர்க்கப்பட வேண்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







காலைப் பொழுதினிலே கண்விழித்து
எழும் வேளையிலே
உயர் சுடர் வானை நோக்கி நின்றேன்
திகைத்த படியே!

கீழ்த்திசையில் சூரியன் தான் எங்கும்
ஒளி பரப்பினானே
நோக்கிய இடமெல்லாம் கண்
சிரிக்க ஒளிரிற்றே

ஆலமரத்தின் கிளையை தொட்ட
தென்றல் வந்து
எனக்கு மாலைகள் இட்டு
சென்றதுவே!

மாமரத்தின் இனிய கனியை கொத்தி
சுவைத்த கிளி
அந்த மாம்பழத்தின் ருசியை கண்டு
பேரின்பம் அடைந்ததுவே!

காலைப்பொழுதில் கரைந்த
கருங்காக்கைகள்
மின்னுகின்ற கீழ்க்கடலை நோக்கி
பறந்தனவே

பச்சை பூண்ட புற்களெல்லாம்
தலையசைத்து ஆடியதே
கிட்ட போய்ப் பார்க்கையில்
பனித்துளிகள் ஈர்ந்தனவே!

காலைப்பொழுதிலே கண்டிருந்தேன்
நான்இதை
ஞால மறிந்திடவே நான் அருமைப்
பாட்டிசைத்தேன்!

**T.**சினேகா
கமு/உவெஸ்லி உயர்தரப் பாடசாலை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மணிப்புறாவின் பயணத்திலே
மாநிலமும் மயங்குகிறது
தூங்கிக் கிடந்த திறமைகளை
தூக்கிப் பறந்ததுவே சிறகுகள்
படைப்புக்களை முத்தாகவும்
அகத்தை நூலாகவும் கோர்த்து
மணிப்புறா என்ற மாலையாக்கி
இன்று உயரப்பறந்தது பலர்
திறமைகளை வெளிக்காட்டவே
உயர்ந்து பறக்கும் தன் சிறகை விரித்து!

ம.ஜினேந்திரன்
தரம்-9
கமு/R.K.M மகாவித்தியாலயம்



தேர்தல் என்றவுடன்
தெருவெல்லாம் இருந்த சுவரொட்டிகள்
ஆடுகளின் உணவாய் மாறிவிட்டன
வெள்ளை வேட்டியுடன்
வேனில் வந்திறங்கிய ஆசாமிகளின் தலைவன்
கூப்பிய கரங்களுடன் நீட்டுகிறான்
ஒரு நோட்டீசை நேராக
அரசியல் சங்கதிகளின்
ஆடுகளமாய் எழுந்த வரிகளுடன் - இறுதியில்
எம் சின்னத்தில் எம் வாக்குகள் - என்று
ஏளனமாய் சில வரிகள்
புள்ளடி போட்டு - அவனை
புகழின் உச்சிக்கு கொண்டு சென்றால்
நான் ஏழையின் சொத்து - என
அவன் மேடையில் முழக்கம்
பட்ட கடன் மத்தியிலும்
பாமி கால் ஒடியபின்
ஊரின் வீதியைத் திருத்த

பாக்கியராஜா மிதுர்ஷன்
தரம் - 11
கமு / விஷ்ணு மகா வித்தியாலயம்
பெரிய நீலாவணை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞர் மு.சடாட்சரனின் பாதை புதிது

துணை ஆசிரியர்



மூத்த கவிஞர் மு. சடாட்சரன் அவர்களது முத்தான கவிதைகள் அடங்கிய முதல் கவிதைத் தொகுப்பினை வெளியிட்டு ஈழத்து இலக்கிய வரலாற்றில் மணிப்புறா சஞ்சிகை தனிச்சிறப்பினையும், வரலாற்று முக்கியத்துவத்தினையும் பெறுகின்றது.

1959ம் ஆண்டு சுதந்திரன் பத்திரிகையில் வெளியான தனது **"பாரதி யார்?"** எனும் முதற்கவிதை மூலம் எழுத்துலகில் பிரவேசித்து அழகுறும் எழுத்தினாலும் ஆழமான கருத்தினாலும் அனைவரையும் ஈர்த்து ஈழத்தின் சிறந்த கவிஞராக மிளிரும் மு. சடாட்சரன் அவர்களது **"பாதை புதிது"** எனும் கவிதைத் தொகுப்பினை கடந்த 10.02.2013அன்று சமூக சேவை அமைப்பான அகரம் அமைப்பினால் வெளிவந்து கொண்டிருக்கின்ற மணிப்புறா சஞ்சிகை வெளியிட்டு வைத்ததில் பெருமை கொள்கின்றது.

எழுத்துலகில் பயணித்து பலஆண்டுகாலம் கடந்த நிலையிலும், தனது பலகவிதைகள் தேசிய பத்திரிகைகள், சஞ்சிகைகள் என பலவாறும் பிரசுரிக்கப்பட்ட போதும் ஒருமுழுத்தொகுப்பாக வெளிவராத குறையை இன்றைய காலம் சுமந்துகொண்டிருந்த வேளையில், கடந்த 2009 ம் ஆண்டில் புரவலர் புத்தகப் பூங்காவின் வெளியீடாக இவரது சிறுகதைகள் தொகுப்பான "மேட்டுநிலம்" வெளிவந்து கிழக்கு மாகாணக் கல்விப் பண்பாட்டலுவல்கள் அமைச்சின் இலக்கிய நூலுக்கான பரிசையும் பெற்றுக்கொண்டது. இருப்பினும், இவரது கவிதைகள் அடங்கிய தொகுப்பு வெளிவராமை அனைவருக்கும் ஏமாற்றத்தினையே கொடுத்திருந்தது என்பது உண்மை. உலகம் நன்கறிந்த இன்று மறைந்த போன பெருங்கவிஞர்களின் கவிதைகள் நூலுருப்பெறாமையால் இன்றைய சமூகம் எவ்வாறு அவர்களது கவிதைகளை இழந்து நிற்கின்றதோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோல எதிர்காலம் மு. சடாட்சரன் அவர்களது கவிதைகளையும் இழந்து விடுமோ என்ற ஐயம் இன்றைய இளம் எழுத்தாளர்களதும், மூத்த படைப்பாளர்களதும், வாசகர்களதும், விமர்சகர்களதும், பெரும் வினாவுக்கு விடைகொடுப்பதாக "பாதைபுதிது" கவிதை நூல் வெளிவந்திருக்கிறது.

எம்மண்ணின் இருப்பை எழுத்தால் பலப்படுத்திய மறைந்தமாபெரும் கவிஞர் நீலாவணன் அவர்களது வாழ்த்துடன் ஆரம்பமாகும் பாதை புதிது நூல் ஆழமான கவிவரிகளுடன் தனது பாதையை வாசகர்களுக்கு விரித்துச் செல்கின்றது; அவர்களை தன் பாதை வழியே அழைத்துச் செல்கின்றது. பாதை புதிது நூலானது நூலாசிரியர் தனது இளமைக்காலம் முதல் இலக்கியத்தில் இணைந்து பயணித்த உலகம் நன்கறிந்த ஈழத்துக் கவிஞர்களான நீலாவணன், மகாகவி, முருகையன், சண்முகம் சிவலிங்கம், பசில் காரியப்பர் மற்றும் மருதூர்க்கனி போன்றோரை மீண்டும் மீண்டும் நினைக்க வைத்துள்ளது.

அகரத்தின் மணிப்புறா சஞ்சிகை வெளிவந்து ஒரு மாதகாலம் முடியும் முன்னமே தனது சேவைப்பரப்பை இலக்கியம் சார்ந்து விஸ்தரிக்கும் நோக்கோடும், படைப்பாளர்களை கௌரவிக்கும் நோக்கோடும், பாதை புதிது கவிதை நூலினை முதற்கட்டமாக வெளியிட்டு வைத்தது. சஞ்சிகையின் பிரதான ஆசிரியர் பாவாணர் அக்கரைப் பாக்கியன் தலைமையில் இடம்பெற்ற இவ்வெளியீட்டு விழாவுக்கு நாடகத்துறைக்கும், எழுத்துத்துறைக்கும் பெரும் பங்காற்றிக்கொண்டிருக்கும் பேராசிரியர். சி. மௌனகுரு அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். அத்தோடு சிறப்பு அதிதிகளாக போராசிரியர். சித்திரலேகா மௌனகுரு, கலாநிதி அ.ப.மு. அஷ்ர.ஃப், பேராசிரியர் யோகராசா மற்றும் அகரம் அமைப்பின் தலைவர் செ. துஜியந்தன் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர். நூலின் வெளியீட்டுரையினை கிழக்கிலங்கையின் முன்னனி சிற்றிதழான செங்கதிர் சஞ்சிகையின் ஆசிரியர் செங்கதிரோன் த. கோபாலக்கிருஷ்ணன் அவர்கள் ஆற்றியிருந்தார்கள். அதிதிகள் முதல் அங்கு வருகைதந்த அநேகர் எழுத்தாளர்களாகவும், விமர்சகர்களாகவும் அவைநிறையக் காட்சிதந்தமை நூலுக்கான வரவேற்பை மென்மேலும் வலுச்சேர்த்தது.

பெரும் வரவேற்பிற்கு மத்தியில் வெளிவந்துள்ள பாதைபுதிது நூலின் ஆசிரியர் எதிர்காலத்தில் இன்னும் பல படைப்புக்களை வாசகர்களுக்குத் தர வேண்டும் என்றும், இவரது கவிதைகள், சிறுகதைகள் தமிழ்ப்பாட அலகுகளில் எதிர்காலத்தில் சேர்க்கப்படவும் வேண்டுமென்ற ஆவலோடு காத்திரமான படைப்புக்களைத் தந்த மூத்த கவிஞர் மு. சடாட்சரன் அவர்களுக்கு வாழ்த்துக்களையும் மணிப்புறா தெரிவித்துக்கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகரத்தின் வெளிச்சங்கள்



அகரத்தின் மனிப்புறா சஞ்சிகையின் முதலாவது இதழ் வெளியீட்டு விழா பாண்டிருப்பு நாவலர் வித்தியாலயத்தில் நடைபெற்றபோது நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட பேராசிரியர் சி.மௌனகுரு நூலின் முதற்பிரதியை தேசமான்ய லயன் எஸ்.சிறிரங்கனிடம் வழங்குவதையும் அருகில் ஆசிரியர் பாவணர் அக்கரைப்பாக்கியன், துணை ஆசிரியர் புதுமைவாணன், நிறுவுநர் அகரம் செ.துஜியந்தன் ஆகியோரையும் இங்கு காணலாம்.



அகரத்தின் ஏற்பாட்டில் மாணவர்களின் இலக்கிய ஆற்றலை மேம்படுத்தும் முகமாக நடைபெற்ற கவிதை பயிற்சி பட்டறையில் கலந்து கொண்ட மாணவர்களையும் கவிஞர் மருதமுனை விஜிலி உரையாற்றுவதையும் இங்கு காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அகரம் சமூக அமையத்தினால் வறுமையிலும் திறமையான மாணவர்களின் பிரத்தியோக வகுப்பிற்கான ஊக்குவிப்பு பணம் வழங்கும் நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கே.தங்கேஸ்வரி மாணவி ஒருவருக்கு ஊக்குவிப்பு பணம் வழங்குவதையும் கலாநிதி எஸ்.கணேஸ், உதவிக்கல்வி பணிப்பாளர் கே.வரதராஜன், ஓய்வு நிலை அதிபர் இ.இராஜரெட்ணம், அகரம் செ.துஜியந்தன் ஆகியோரையும் இங்கு காணலாம்.



அகரம் சமூக அமையத்தினால் மாணவர்களுக்கான இலவச அப்பியாசக் கொப்பிகள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றபோது அகரம் தலைவர் செ.துஜியந்தன், மாணவி ஒருவருக்கு அப்பியாசக் கொப்பி வழங்குவதையும் அருகில் தேசமான்ய எஸ்.சிறிரங்கன் ஓய்வுநிலை அதிபர் இ.இராஜரெட்ணம் ஆகியோர் நிற்பதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கிய வாழ்வுதரும் யோகம்



கா. சந்திரலிங்கம்
(பெங்களூர், இந்தியா யோகப்பயிற்சி)
சேனைக்குடியிருப்பு

யோகம் என்று கூறும்போது இணைத்தல் அல்லது ஒன்று கூட்டுதல் எனப்பொருள்படும். அதாவது மனிதனுக்கும் இறைவனுக்கும் ஒரு தொடர்பை ஏற்படுத்துதல், சிதறி ஓடும் மனதின் சக்தியை அதிகரிக்கச்செய்தல், ஆதியில் ஜீவன் எந்தநிலையில் இருந்ததோ அதே நிலையை மீண்டும் அடையச்செய்தல் எனக்கூறலாம்.

"யோக் சித்த விருத்தி நிரோத"

"சித்தத்தின் விருத்திகளை ஒடுங்குதல் யோகம்" – பதஞ்சலி யோக சூத்திரம் : 2

யோகம் ஒரு பூரண விஞ்ஞானமாகும். இது மனதினை உறுதியாக வைப்பதற்கு மட்டுமன்றி, அவனை எல்லா வகையிலும் முழுமையடையச்செய்து அவனது வாழ்வை உயர்த்துகின்றது. மனிதனை மிருக நிலையிலிருந்து சாதாரண மனிதனாக மாற்றி உயர்ந்த நிலையில் அதிமானுடன் என்று சொல்லக்கூடிய அளவுக்குக் கொண்டுவந்து இறுதியில் தெய்வத்தன்மை உடையவனாக மாற்றுகின்றது.

## ॐ யோகத்தின் வகைகளும், படிகளும்

பொதுவாக கர்மயோகம், பக்தியோகம், இராஜயோகம், ஞானயோகம் என நான்கு வகையான யோகங்கள் காணப்படுகின்றன. யோகத்தில் எட்டுப்படிகள் உள்ளன. அவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. இயமம் : அகிம்சை, சுய அடக்கம்

2. நியமம் : உடலால் உள்ளத்தால் தூய்மையோடிருத்தல்.

3. ஆசனம் : ஆசனம் என்பது மனிதன் உள – உடலால் ஆரோக்கியமடைய ஏற்படுத்தப்பட்ட பல்வேறு பட்ட இருக்கை முறைகள் தற்போதைய மிகவேகமான நெருக்கடியான, மாறிவரும் உலகுக்கு முகம்கொடுக்கும் மனிதன் பல்வேறு பிரச்சினைகளுக்கு ஆளாகி மனநெருக்கடிக்கு ஆட்பட்டு மனஅழுத்தம் ஏற்படுவதன் காரணமாக பல்வேறுபட்ட நோய்களுக்கு ஆளாகின்றான். குறிப்பாக அஸ்மா, நீரழிவு, இரத்த அழுத்தம், மாரடைப்பு. சினம், நித்திரையின்மை போன்ற நோய்களைக் குறிப்பிடலாம். விஞ்ஞான ரீதியாக இவை நிரூபிக்கப்பட்டுள்ளன என்பதை நாம் நோக்கவேண்டும்.

எனவே பல்வேறுபட்ட நோய்களிலிருந்து எங்களைக் காப்பாற்ற, நாங்கள் ஆரோக்கியமாக வாழ எப்பொழுதும் மகிழ்ச்சிகரமாக மனத்தூய்மையுடன் இருக்க யோகம் எங்களுக்கு பேருதவி செய்கிறது.

எனவே, யோகத்தின் படிகளாக விளங்கும் யோகாசனம். தியாகம் என்பவற்றை நாம் செய்து வருவதால் பல்வேறு பட்ட நோய்களினின்று நீங்கி ஆரோக்கியமாக வாழ்வதோடு பல்வேறுபட்ட நன்மைகளையும் பெறலாம்.

## யோகாசனம் செய்வதற்கு முன் அவதானிக்க வேண்டிய விடயங்கள்.

ஆசனம் செய்யுமிடம் அமைதிமிக்கதாக நல்ல தூய்மையான காற்றோட்டம் உள்ளதாக இருக்க வேண்டும். நிலத்தில் விரிப்பொன்றை விரித்து செய்யவும். (வெற்சீற், பாய் போன்றவை)

உடல் பயிற்சி வெளியங்கப் பயிற்சி என்பதாலும் யோகாசனம் உளஅங்கப் பயிற்சியாக இருப்பதாலும் இரண்டும் ஒரே நேரத்தில் செய்யக்கூடாது. உடலைத் தளர்த்தும் பயிற்சிகள் செய்தால் நன்கு ஓய்வு எடுத்த பின் ஆசனம் செய்யலாம். உணவு உண்டு குறைந்தது நான்கு மணித்தியாலங்களாவது சென்றதன் பின்பே யோகாசனம் செய்ய வேண்டும். சிற்றுண்டியாயின் குறைந்தது இரண்டு மணித்தியாலங்களாவது செல்ல வேண்டும்.

பெண்கள் மாதவிலக்கு காலங்களில் ஆசனம் செய்வதைத் தவிர்க்க வேண்டும். கர்ப்பிணிப் பெண்கள் ஏற்கனவே ஆசனங்கள் செய்து வருபவர்களாக இருந்தால் இரண்டு மாதங்களிலிருந்து எட்டு மாதங்கள் வரை ஆசனங்கள் செய்வதை நிறுத்தவும். எட்டு மாதங்களின் பின் சில ஒழுங்கு படுத்தப்பட்ட இலகுவான ஆசனங்களைச் செய்யலாம்.

ஆசனம் செய்து முடித்து அரைமணித்தியாலத்தின் பின்பே குளிக்க வேண்டும். அல்லது ஆசனம் செய்வதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிக்கலாம்.

ஆசனம் செய்தபின் உடலில் புத்துணர்ச்சியும், புதுத்தென்பும் பெருகுவதோடு மனம் அமைதியாக இருக்கும்.

## யோகாசனம் செய்ய ஆரம்பிப்பது எவ்வாறு?

முதலில் நிமிர்ந்து இருந்து இதற்கு வஜ்ஜிராசம், பத்மாசனம் என்பவற்றைப் பயன்படுத்தலாம். இவை இரண்டும் முடியாதவர்கள் விரும்பியவாறு அமரலாம். முதுகு முன்னெழும்பு வளையாது இருக்கப் பார்த்துக்கொள்ளவும். குருவை நினைத்து இறைவனை மனதிற்கொண்டு மானசீகமாக பணிந்து வணங்கி ஆசனத்தில் வெற்றிபெற உங்கள் அருளைத் தருவீர்களாக எனவேண்டி ஆசனங்களைச் செய்ய ஆரம்பிக்கவும். இவ்வாறு செய்வதால் மனம் ஒன்றுபடுகின்றது. இறையருளும் குருத்துணையும் கிடைக்கின்றது. ஆசனம் செய்ய ஆர்வம் உண்டாகின்றது. ஆசனத்தில் சித்தி கிடைக்கின்றது.

பிரார்த்தனையின் பின் "ஓம்" காரம் செய்க. ஓம் எனும் பிரணவ மந்திரத்தை குறைந்தது மூன்று தடவையாவது சத்தமாக நீண்டு உச்சரியுங்கள். அதன் ஒலி அதிர்வுகளை உடலின் சகல பாகங்களுக்கும் அனுப்பி அதனை உணரக்கூடியளவு தினமும் செய்க.

இதே போன்று "மக்கர்" என்று சொல்லப்படும் ம் என்ற சத்தத்தினை குறைந்தது மூன்று தடவையாவது நீண்டு உச்சரியுங்கள். கழுத்தின் மேற்பாகங்களான முகம், வாய், பல். மூக்கு, தலை என்பவற்றுக்கு ஒலியதிர்வுகளை அனுப்பி அதனை மானசீகமாக உணர்க.

## சூரிய நமஸ்காரம் செய்க


சூரிய நமஸ்காரம் ஆசனமாகக் கருதப்படாவிட்டாலும் சூரியசக்தியைக் கிரகிக்கக்கூடியதும் மிகச்சக்தி வாய்ந்ததும் அனைத்து உடல் உறுப்புக்களுக்கும் புத்துணர்ச்சியளிக்கக் கூடியதும் ஈரல், கல்லீரல், பெருங்குடல், சிறுகுடல், சிறுநீரகங்கள், சுவாசப்பை, இதயம், மூளை போன்றவற்றைச் சிறந்தமுறையில் இயங்கச் செய்யக்கூடியதுமாகும். சூரிய நமஸ்காரத்தைக் குறைந்தது மூன்று தடவைகளாவது செய்க!



அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கூட தினமும் வெள்ளை மாளிகையில் யோகா பயிற்சி செய்து வருவது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூமணக்கும் பூவையரின் புகலிடம் தான் எங்குளதோ?

- சித்தி நயீமா வஸீகரன் -

தாய்க்குலத்தார் நிம்மதியாய் வாழுகின்ற நிலையிங்கே
தேய்ந்துபோய் வருவதால் காமுகரின் ஆதிக்கம்
களியாட்டம், வெறியாட்டம் வான் பரப்பின்
தூமகேது நட்சத்திரம் குடியிருக்கும் வாசலையும்
தொட்டுவிடும் தூரத்தில் அண்மித்து விட்டதுவோ?
பட்டுப்போன மரமாக பாவையரின் கோலங்கள் -
தாய்மையின் மகோன்னதங்கள் முடமாக்கப்படுவதனால்
தூய்மையான வாழ்விழந்து வாடும் நிலை சீதனமோ?

ஆண் மகனே! வெறிக் கிரையாகும் பெண்ணினத்தை
வீண்பழிக்குள்ளாக்கி நீ வேடிக்கை காட்டுகிறாய் -
பாடசாலை செல்லுகின்ற ஆசிரியை மாணவியர்
மாடிமனை வீட்டிலும் தான் வேலை செய்யும் மாதரையும்
சந்தையிலே சந்தியிலே கண்டுவிட்ட பெண்ணையும்தான்
சிந்தனையால் பின்னடைவு கொண்டு வாழும் பெண்ணையும் தான்
காமத்தின் கொடும் பிடிக்குள் உள்ளாக்கிக் களிக்கிறாய் -
பூமணக்கும் பூவையரின் புகலிடம்தான் எங்குளதோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகனத்தில் பிரயாணம் செய்யும் தாய்க்குலத்தின்
மோகனத்தில் மார்புகளில் சுவை காண முனைகின்றாய் -
பிரசவத்தாய் என்றாலும் உன்னிதயம் பாறைதான்!
சரசங்கள், சேட்டைகளால் சல்லாபம் தேடுகிறாய்.
தாய் என்றும், மகள் என்றும் மாற்றானின் மனைவி என்றும்
சேய் ஏந்திப் போகின்ற பெண் என்றும் பாராமல்
உன் விரகதாபங்கள் உச்சநிலை கொள்வதனால்
பெண்ணினத்தின் துயரங்களை நீ! உணர மாட்டாயே!

புகைவண்டிப் பிரயாணம் செய்கின்ற பெண்ணிடமும்
வகையாக நீ - மாட்டியதை பத்திரிகை சொன்னதுவே!
மறைமலை அடிகளார் போல், பேரறிஞர் அண்ணா போல்
நிறைவான வாழ்வுகண்ட ஆறுமுக நாவலர் போல்
இறையச்சம் என்கின்ற ஒளிப்புனலில் படகோட்டி
முறையாக வாழ்வதனால் முறைகேடு நிகழாதே!
ஆணுடம்பைக் கண்ணியமாய்ப் பாதுகாத்து மேதினியில்
பேணுதலாய் வாழ்வதனால் பெண்ணினமும் சாந்தி கொள்ளும்!



**தரம் 03 வகுப்பாசிரியர் :-**
சுரேஸ்!
ஆறுல நாலு போகுமா?

**சுரேஸ் :-**
ஆறுல நாலுபோகாது சேர்,
தோணிதான் போகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஔவைப்பாட்டி

பாவாணர் அக்கரைப்பாக்கியன



அமுதத் தமிழில் கவிதந்த
ஔவைப்பாட்டி நம்பாட்டி
எமது வாழ்வு நலன் பெறவே
ஏற்றம் தந்த தமிழ்ப் பாட்டி!

நான்கைக் கொடுத்து மூன்றுதனை
நலமாய்ப்பெற்ற மூதாட்டி
வேண்டும் வரங்கள் பெற்றிடவே
விநாயகனைத் தொழுதார் தினமே!

வாக்குண்டாமும், நந்நெறியும்
வளமாய்க் கொன்றை வேந்தனையும்
ஆக்கி ஆத்திசூடியையும்
அளித்தார் எங்கள் பெரும்பாட்டி!

சுட்ட பழம் வேண்டுமா
சுடாத பழம் வேண்டுமா
கேட்டே முருகன் போட்ட பழம்
கிடைக்க ஊதிப் பார்த்தவராம்!

நம்பிக்கையோடு ஐங்கரனை
நாளும் தொழவே கணபதியும்
தும்பிக்கையாலே தூக்கித்தான்
சொர்க்கம் சேர்த்தார் அருள் பெறவே!

எங்கும் சுகந்தம் வீசிடவே
இனிதாய் வாழ்ந்த ஔவையை
பொங்கு தமிழில் போற்றியே
புவியில் நாளும் வாழுவமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாயதி வீடு

ஆத்மராஜா றூத் சந்திரிக்கா

பங்குனி வெயில் தீயாய்ச் சுட்டது.

வியர்வைப் பிசுபிசுப்பும், களைப்பும் சேர்ந்து நடை தளர்ந்தது. ஆற்றோரமாய் நின்ற மரநிழலில் ஒதுங்கினார் ஏரம்பு மாஸ்டர்.

இன்னொரு தடவை போய்ப் பேசிப் பார்ப்பதா? அல்லது திரும்பவும் வீட்டுக்கே போய்விடுவதா? இதுதான் அவர் முன்னுள்ள கேள்வி. இருபத்து மூன்று வருஷங்களாய் ஒவ்வொரு மாத ஆரம்பத்திலும் அவர் இப்படித்தான் இதே கேள்வியோடுதான் அலைந்து கொண்டிருக்கிறார்.

இந்த அலைச்சல் ஓய்ந்தபாடில்லை. ஆவணியில் இரண்டாம் பொண்ணுக்கு திருமணம் நிச்சயமாகி விட்டிருக்கிறது. திருமணத்துக்கென்று ஏகப்பட்ட வேலைகள் இருந்தன. எல்லாவற்றிற்கும் மேலாக சீதன வீடு, வளவு பெரும் கேள்விக்குறியாகி விட்டிருக்கிறது.

மூத்த பெண்ணுக்கு திருமணம் செய்யும்போது இதே பிரச்சினை. ஒரு மாதிரி மாப்பிள்ளை வீட்டாரின் கையைக்காலைப் பிடித்து ஒப்பேற்றி விட்டார்.

ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூறாம் ஆண்டு ஏற்பட்ட இரண்டாம் ஈழப்போர் காலத்தில் இருந்து அவர் வாழ்க்கை சஞ்சலமாகிப் போனது.

மூத்தமகன் சுடப்பட்டு இறந்தபோது மொத்தகுடும்பமும் ஆடிப்போனது. அந்த அவலம் ஆறிப்போவதற்குள் குடியிருப்பைக் காலியாக்கச்சொல்லி ஏற்பட்ட நிர்ப்பந்தம் சொல்லி மாளாது.

வங்கக்கடலாடி அலைபாயும் நெய்தல் நிலப்பரப்பில், தென்னையும் புன்னையும் கிண்ணையும் சூழ்ந்த இதமான நிலப்பரப்பில் ஓர் வாடிவீட்டின் சௌகர்யத்தோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்த குடிமனை அவருடையது. மூன்று பக்கமும் ஆறும் ஓடையும் கடலுமாய் நீர்சூழ்ந்து பசுமை பரம்பிக்கிடந்த அவர் சாம்ராஜ்யம் தொண்ணூறில் குறிவைக்கப்பட்டது. இரண்டு தலைமுறையாய் கூடிக்குலாவி மகிழ்ந்த மனையையும், அந்தக் காணியையும் அவர்கள் குறிவைத்துக் கேட்டபோது அவர் பதைபதைத்துப் போனார்.

"மாஸ்டர் இந்த இடம் எங்களுக்கு வேணும் வேறு இடம் பார்த்து இருங்க. வாடகை தரலாம். இந்த இடம் பாதுகாப்பானது முகாம் அமையப்போகுது கொஞ்சக்காலத்துக்கு"

கொச்சைத் தமிழில் உடைந்துபோன வார்த்தைகளின் நிதர்சனம் பிடிபட்டபோது அவர் நெஞ்சுருகிப் போனார்.

சேர் இது தாயதி வீடு. ஐம்பது வருஷத்துக்கும் மேலாக நாங்கள் வாழ்ந்த வீடு. இந்த இடத்தை விட்டு நாங்கள் எங்கு போக முடியும். போனாலும் கூட புதிய இடத்தில் மனம் ஒன்றி வாழமுடியாது சேர். இங்கிருக்கின்ற ஒவ்வொரு மரமும் செடியும் நாங்கள் பார்த்துப்பார்த்து வளர்த்தது எங்கள் தாய் தகப்பன் நட்ட மரங்கள் இப்போது விருட்சமாகி விட்டிருக்கிறது. இந்த வீட்டின் ஒவ்வொரு செங்கல்லிலும் எங்கள் பெற்றோரின் கனவுகளும் வியர்வையும் சேர்ந்திருக்கிறது சேர், இந்தச் சின்னப்பிள்ளைகளோடு நாங்கள் எப்படி சேர் வேறு இடம் போறது?

"ப்ளீஸ் சேர், கொஞ்சம் இரங்குங்கள், நீங்கள் வேறு இடம் பாருங்கள் சேர்"

அவர்கள் காலைப்பிடித்துக் கெஞ்சினார்கள். அவர்கள் கெஞ்சல் கதறல் செல்லாக்காசானது.

அவர்கள் முடிவில் தீவிரமிருந்தது. அதிகாரம் மிகுந்திருந்தது.

"இந்த இடம்தான் எங்களுக்கு வசதியானது, பாதுகாப்பானது. ஒரு கிழமை அவகாசம் தாறம் வேறு இடம் பார்த்துப் போங்கள். மாதம் மாதம் வாடகை கிடைக்கும் புரிந்ததா?"

அதிகாரத் தொனியில் மனிதாபிமானம் மரணித்துப் போனது.

மூன்று பெண் குழந்தைகளோடு வீட்டுப் பொருட்களோடு அவர் வாடகை வீடொன்றில் குடியேறினார்.

மனம் ஒட்டாமல் அந்த வீட்டில் ஜீவிதம் நகர்ந்தது.

ஆசையாய் பெற்றோர்கள் வளர்த்த விருட்க்ஷங்கள் தென்னை, பனை, கமுகு எல்லாமே ஓர் பகல் பொழுதில் வெட்டி சாய்க்கப்பட்டன.

தென்னைக் குற்றிகள் பாதுகாப்பு வேலிகளாகின இரட்டைக் கம்பிவேலிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கப்பட்டு மின் குமிழ்கள் பொருத்தப்பட்டு பாதுகாப்பு அரண் அமைக்கப்பட்டு, பச்சை வர்ணம் பூசப்பட்டது.

கோயிலாய் பேணிய குடிமனை பாதுகாப்பு முகாமானது. பவித்திரமாய் பேணிய பூசையறை அம்பலமானது.

பூட்ஸ் கால்களும் சீருடைகளுமாய் அந்த மனையும் வளவும் திமுதிமுத்தது. என்ன சொல்வது?

வாயில்லாப் பூச்சிகளாய் யதார்த்தங்களை ஜீரணிக்க வேண்டிய நிலை.

ஏரம்பு மாஸ்டர் நொந்துபோன மனதுடன் இவற்றையெல்லாம் பார்க்கத் தொடங்கி இருபத்து மூன்று வருடங்கள் ஓடிப்போனது.

மூத்த பெண் பெரியவளானபோது அவர் மனைவி அழுதாள்.

சொந்த வீட்டில சுபகாரியம் செய்யேலாமல் இதென்ன கொடுமை பிள்ளையாரப்பா? அழுது புரண்டாள், திட்டினாள்.

காலவோட்டத்தில் ஜீரணிப்புக்களே நிச்சயமாகின.

மூத்த பெண்ணுக்கு திருமணம் வந்த போது இதே அழுகையை மனைவி அழுது முடித்தாள்.

சொந்த மருமகன் குடும்ப நிலைமையை எண்ணி திருமணத்திற்கு சம்மதித்தார். "அவனுகள் எப்ப எழும்புறானுகளோ அப்ப போய்க் குடியிருக்கலாம், பிரச்சினை இல்ல மாமா"

நெஞ்சில் பால் வார்த்தார்.

காலங்கள் மட்டும் ஓடியது. நாட்டில் யுத்தம் ஓய்ந்தது என்றெல்லாம் கேள்விப்பட்டு நிம்மதியானார். ஆனால் அவர் காணி மட்டும் இன்னமும் பாதுகாப்பு அரணோடு அரசோச்சிக் கொண்டிருக்கிறது.

ஆறு மாதத்துக்கு முன் மனைவி வருத்தப்பட்டு படுத்த படுக்கையான போது கூட போய்க்கெஞ்சிப் பார்த்தார்.

சேர் என்ர மனைவிக்கு வருத்தம். கெதியில செத்துப் போயிருவாள். தன்ட சவத்தை சொந்த வீட்டில வைக்கோனுமெண்டு கையைப் பிடிச்சு சொல்லுறாள். 'சேர் ப்ளீஸ் எங்கட கருணை மனுவை ஏற்றுக்கொள்ளங்க, மேலிடத்துக்கு அனுப்பி ஒரு வழி பண்ணுங்க" கெஞ்சிப் பார்த்தார்.

"நாங்க முடிவு செய்யேலாது, பெரிய இடத்து முடிவு இது. இந்த இடத்திலிருந்து இப்போதைக்கு எழும்புற உத்தேசம் இல்ல. உங்கட கஷ்டம் புரியுது. எங்களால ஒன்றும் செய்யேலாது ஐயா"

அதிகாரியின் பதிலில் மனமுடைந்து போனார். மௌனியானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லி மூன்றாம் நாள் மனைவி இறந்து போனாள். வாடகை வீட்டிலே கடைசிக் கணமும் முடிந்து போனது.

சுடலையால் வந்து குமுறி அழுதார்.

ஏனிந்த சாபக்கேடு?

ஏனிந்த அனியாயம்?

இரத்தமும் வியர்வையும் சிந்தி நாங்கள் உழைத்த மண்ணில், வீட்டில் நாங்கள் வாழ முடியாத நிலை? அந்நிய இடத்தில் நிம்மதி இழந்து தவிக்கம் அவர் போன்ற எத்தனை பேர் இன்னமும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்?

பெண்பிள்ளைகளுக்கு பிரித்துக் கொடுக்க வேண்டிய சீதன வளவுகள் எத்தனை பாதுகாப்பு வலையங்களாகிக் கிடக்கின்றன?

எங்கள் வாழ்வில் உரிமைகள் என்ன?

நாங்கள் இந்த மண்ணின் மக்கள் இல்லையா? அவர்கள் அடிக்கடி தன்னுள் கேட்கும் கேள்வியது.

இப்போது அவர் இரண்டாம் பெண்ணுக்கு திருமணம் நிச்சயமாகி விட்டிருக்கிறது. மாப்பிள்ளை வீட்டார் சீதன ஆதனம் கேட்கின்றார்கள். சொந்த வளவில் புது வீடு கேட்கின்றார்கள். அவரின் மொத்தப் பென்சன் காசு வந்த போது அதை அப்படியே வங்கியில் போட்டார். நிரந்தர வைப்பில்.

முகாம் எழும்பினால் வளவைத் துப்பரவு செய்து ஓர் மாடி வீடு கட்டலாம். என்று நினைத்தார்.

"கெதியில முகாம் எழும்பும் போல கிடக்கு அடிக்கடி போய்க் கேட்டுப் பாருங்க மாஸ்டர்" அவர் நண்பர் ராசிக் சொன்னார். கூடவே இரு தடவை நண்பரும் கூட வந்து அதிகாரியைச் சந்தித்துக் கேட்டார்.

'ப்ளீஸ் சேர்... ஏரம்பு மாஸ்டர்ட மகளுக்கு கல்யாணம் நிச்சயமாகியிருக்கு, சீதன வீடு வளவு கொடுக்கோணும். எப்ப சேர் எழும்புவீங்க"

ராசிக் கெஞ்சிப் பார்த்தார்.

"இன்னம் மேலிடத்து ஓடர் வரல்ல, வந்ததும் சொல்லி அனுப்புறம், நாங்க என்ன செய்யேலும் – சொறி" அதிகாரி கையை விரித்தார்.

மூன்று மாதங்களாக ஏரம்பு மாஸ்டர் போகவில்லை. இன்று காலையிலே வெளிக்கிட்டு விட்டார். "என்ட பிள்ளையின்ட கல்யாணம் நடக்குமா? என்ட பிள்ளைக்கு சீதன வீடு கொடுக்கலாமா? என்ட பிள்ளையின்ட கல்யாணம் இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு வளவுப் பிரச்சினையால தடைப்பட்டுப் போகுமா?" அவர் மனம் ஆயிரம்கேள்விகளோடும் குழப்பங்களோடும் தவித்தது.

இடது கரம் திருப்பி நேரம் பார்த்தார். "ஓ நேரம் ஓடிப் போயிற்று"

மெல்ல எழுந்து நடக்கத் தொடங்கினார்.

என்ட சீவனாவது சொந்த வீட்டில போகுமோ? அல்லது நானும் வாடகை வீட்டில் பிணமாகி, சொந்த மண் பாராமல் சுடலைக்குப் போவேனோ?

கனத்த மனதோடு நடந்தார் நெஞ்சு வலித்தது. இராணுவ முகாம் அண்மித்தது.

வாசலடிக்கு வந்தார். "பெரிய சேரைப் பார்க்கணும்" சிப்பாயிடம் சொன்னார்.

'இருங்கள் சேர் கூப்பிடுவார்' மர பெஞ்சில் அமர்ந்தார் தண்ணீர் விடாய்த்தது.

"கொஞ்சம் தண்ணீர் தாருங்கள்" சிப்பாய் தண்ணீர் கொடுத்தான். பெரிய சேர் கூப்பிட்டார். எழுந்து அவர் முன் போய் அமர்ந்தார்.

"சேர் என் பிள்ளைக்கு கல்யாணம், சீதன வீடுவளவு வேணும் ப்ளீஸ் சேர்... எப்ப வீடுவீங்க"

"உங்கட நிலமை விளங்குது ஐயா, இன்னும் ஓடர் வரல்ல வந்ததும் எழும்புவம் சொறி" மேலதிகாரி கையை விரித்தார்.

ஏரம்பு மாஸ்டர் மெல்ல எழுந்தார். நெஞ்சு வலித்தது, விழப்போனார். அதிகாரி சட்டென எழுந்து அவரைப் பிடித்தார்.

மூச்சு நின்றிருந்தது, அதிகாரி அதிர்ந்தார். அவர் சொந்த மண்ணில் அவர் உடல் சாய்ந்தது.

**நற்சிந்தனை**

நீ வாழ்வதற்காக எதை வேண்டுமானாலும் செய்துவிடாதே! கூட்டில் அடைக்கப்பட்டிருக்கும் பறவையை கொல்வது கடினம் அல்ல! அதைப்போல உன்னிடத்தில் சிக்கிய எளியவர்களை வதைப்பதும் சுலபம் தான்! ஆனால் நீ அந்த வேலையைச் செய்யாதே! இறைவன் உனக்குக்காட்டிய நல் வழியில் நடந்து நீ உயர்வடைவதற்கு மேலும் மேலும் முயற்சி செய். குறுக்கு வழியில் மேன்மையடைய ஒருபோதும் நினையாதே! அந்த வழி உனக்கு நல்ல பலனைத் தராது. ((இந்து தர்ம சாத்திரம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி ஜெனிதா பிரதீபன்
பிரதேச செயலகம்,
நாவிதன்வெளி

# பெண்களே நாட்டின் கண்கள்

பெண்கள் அபிவிருத்தியின் ஓர் அங்கம். பெண்கள் நாட்டின் கண்கள். எனவே, பெண்கள் மதிக்கப்பட வேண்டும். பெண்கள் அபிவிருத்திப் பாதையில் நடைபோடவேண்டும். அதற்காக தங்களிடம் தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். எதிர்கால சந்ததியினரிடம் சமூகமயமாதல் சிந்தனையில் ஆண் – பெண் சமத்துவம் தொடர்பான சமூகமயமாதலை ஏற்படுத்த வேண்டும். ஒருநாடு ஒருபறவை போன்றது என எடுத்துக்கொண்டால் ஒரு பறவை பறப்பதற்கு இரு சிறகுகள் எவ்வளவு அவசியமோ! அதுபோல் ஒருநாட்டின் அபிவிருத்திக்கு ஆண் – பெண் ஆகிய இருபாலாரதும் அபிவிருத்தி மிக முக்கியமானதாகும். எனவே சமூகமயமாதல் சிந்தனைகள் மாற்றமடைய வேண்டும். சமூகமயமாதல் என்பது ஒரு மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை சமூகத்திற்கு ஏற்புடையவனாக வாழக்கூடிய வகையில் சமூகமயப்படுத்துவதாகும். இந்த சமூகமயமாதல் சிந்தனையில் ஆண் – பெண் இருபாலாருக்கும் சமவாய்ப்பு கொடுப்பதே சிறப்பு. பாகுபாடு காட்டப்படல் கூடாது. இன்றைய சமூகத்தில் பெண்களின் உரிமைகளுக்காக அரச சார்பான, அரச சார்பற்ற நிறுவனங்கள், அமைப்புக்கள் ஒரு பக்கம் உரிமைக்குரல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுப்பிய வண்ணமே உள்ளன. உண்மையில் பெண்களின் உரிமைகள் பேணப்படுகிறதா? பெண்கள் வன்முறைக்குள்ளாக்கப்படாமல் இருக்கின்றார்களா? என்றால் இல்லை என்பதே அனைவரது கருத்துமாகும். எனவே, ஒவ்வொரு குடும்பத்திலும் பெண்கள் மதிக்கப்பட வேண்டும். அப்போதுதான் ஒவ்வொரு சமூகத்திலும் பெண்களின் உரிமைகள் மதிக்கப்படும். அதன் பின்னர் நாட்டிலும் மதிக்கப்படுவார்கள். பின்னர் உலகத்திலும் மதிக்கப்படுவார்கள். இது அத்திவாரமாக கருதப்படும். குடும்பம், பாடசாலை போன்றவற்றினூடாக பெண்கள் – ஆண்களுக்கு சமமானவர்கள் பாரபட்சம் காட்டக்கூடாது போன்ற பால்நிலைப் பாகுபாடு களையப்படக் கூடிய வகையில் சமூகமயமாதல் சிந்தனையில் மாற்றத்தினை ஏற்றுபடுத்த வேண்டும்.

பால் வேறுபாடு என்பது இயற்கையாக ஏற்படுத்தப்பட்ட உயிரியல் சார்ந்த வேறுபாடாகும். இது ஆண், பெண் என்றவகையில் உயிரியில் சார்ந்த படைப்பாகும்.

பால்நிலை வேறுபாடு என்பது சமூகத்தினால் கலாசார ரீதியாக் உருவாக்கப்பட்ட ஒன்று. இதனை மாற்றமுடியும். பால்நிலை சமூகமயமாக்கலில் முக்கிய முகவர்களாக குடும்பம், பாடசாலை, அயலவர்கள், சமயம், தொடர்பு சாதனங்கள், ஒப்பார் குழு போன்றன பங்களிப்புச் செய்கின்றன. தொன்று தொட்டு கலாச்சார ரீதியாக ஆண் – பெண் வேறுபாடு காட்டப்பட்டு பிள்ளைகள் வளர்க்கப்படுகிறார்கள். ஆண்கள் வீரமானவர்கள், வன்மையானவர்கள், பலமுடையவர்கள், உயர்வானவர்கள் என்ற வகையில் அவர்களது உடையலங்காரம், விளையாட்டுப் பொருட்கள் வாங்கிக்கொடுத்து ஆண்களுக்குரிய தனித்துவம் காட்டி வளர்க்கப்படுகிறார்கள். அதற்கு எதிர்மாறாக பெண்கள் மென்மையானவர்கள், பலவீனமுடையவர்கள், அடக்கமாக இருக்கவேண்டும், அதிகம் பேசக்கூடாது, சிரிக்கக்கூடாது, தாழ்வானவர்கள் என குறுகிய வட்டத்துக்குள் வாழவேண்டும் என்ற வகையில் உணவு சமைக்கக்கூடிய வகையில் விளையாட்டுப் பொருட்கள், பொம்மைகளுடன் விளையாடச்செய்தல். அதனால் பெண்கள் குண்டுச் சட்டிக்குள் குதிரையோட்டுபவர்களாகவே காணப்படுகின்றனர். இதற்கு காரணம் எமது முன்னோர்கள் ஆண் – பெண் வேறுபாடு காட்டியே பிள்ளைகளை வளர்த்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றுக்கு மாறாக சில பெற்றோர்கள் ஆணும் பெண்ணும் சமமானவர்கள் என்ற வகையில் வளர்க்கின்றனர். இத்தகையவர்களால் தான் சில பெண்களால் சாதனை புரிய முடிகின்றது.

"அச்சாணி இல்லாத்தேர் முச்சாணும் ஓடாது" என்பார்கள் அனைவரும் பெண்களின் முன்னேற்றத்திற்கு அச்சாணி போல் ஊக்கமளித்து தட்டிக்கொடுப்பது மேலானது.

"விடியல் தரும் விளக்கு பெண்கள்" என்பதை உணர வேண்டும். எனவே, எதிர்கால சந்ததியினரிடையேயாவது பால்நிலை பாகுபாடு காட்டாது பிள்ளைகளை வளர்க்கவேண்டும். ஆணும் பெண்ணும் சட்டத்தின் முன் சமமானவர்கள். மனித உரிமைகள் அனைத்தும் ஆண் – பெண் வேறுபாடு இல்லாது அனைவருக்கும் சமமானது என்பதை புரியவேண்டும். இதனை சுட்டிக்காட்டி பிள்ளைகளை வளர்க்க வேுண்டும். அப்போதுதான் இந்த உலகம் அழிவை நோக்கி நடைபோடாது. ஏனெனில், இன்றைய காலகட்டத்தில் பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் போன்றவற்றினூடாக பால்நிலை வன்முறை, இல்லத்து வன்முறையின் விளைவுகள், சிறுவர் துஸஷ்பிரயோகங்கள் போன்றவற்றை அறியக்கூடியதாக உள்ளன. "பாடசாலை மாணவி பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்டார்" "10 வயது சிறுமியை 68 வயது முதியவர் துஷ்பிரயோகம் செய்தார்" போன்ற பல்வேறு துஷ்பிரயோகங்கள் ஆங்காங்கே நடந்துகொண்டிருக்கின்றன. இந்த நிலையில் சென்றால் எமது நாட்டின் நிலை என்ன! இதனை முடிவுக்கு கொண்டுவர வேண்டும். சரியான விழிப்பணர்வு கிடைக்க வேுண்டும். சட்டத்தை இறுக்கமானதாக்க வேுண்டும். தண்டனைகள் அதிகமானதாக்க வேண்டும்.

ஒவ்வொரு பெண்களும் முதலில் விழிப்படைந்து தங்களை வளப்படுத்திக்கொண்டு வலுவுடையவர்களாக மாற்றவேண்டும். அதற்கு அவர்கள் தங்களுக்குரிய உரிமைகளை தெரிந்து கொள்ள வேண்டும். பெண்களின் உரிமைகள் தொடர்பாக உருவாக்கப்பட்டிருக்கும் மிகப்பெறுமதி வாய்ந்த ஓர் ஆவணம் சீடோ(CEDAW) சமவாயம். ஐக்கிய நாடுகள் அமைப்பு 1979 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ம் திகதி இந்த ஆவணத்தை முன்வைத்தது.

இலங்கை 1981 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 05ம் திகதி இதற்கு உடன்பட்டு கைச்சாத்திட்டுள்ளது. இது பெண்களுக்கு எதிரான அனைத்துவிதமான பாரபட்சங்களையும் ஒழிக்கும் சமவாயம், பெண்கள் மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்கள் ஆகியோர் ஏற்றத்தாழ்வற்ற மனிதப்பிறவிகளாக இருந்து வருகின்றனர். என்ற விடயத்தை அங்கீகரித்துள்ளது. இச்சமவாயமானது,

- பெண்களுக்கு நியாயம் வழங்கும் விதத்தில் சட்டத்தை மாற்றியமைத்தல் மற்றும் புதிய சட்டங்களை உருவாக்குதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கான பொறுப்பினை அரசாங்கம் கொண்டுள்ளதென்பதை கூறுகின்றது.
- மேலும் அரசியல் செயற்பாடுகளில் சமபங்கு ஏற்கும் உரிமை உள்ளது.
- அரசாங்கத்தை பிரதிநிதித்துவம் செய்யும் சம உரிமை உள்ளது.
- இனத்துவத்திற்கான சம உரிமை உண்டு.
- கல்வியைப் பெறுவதற்கான சம உரிமை உண்டு.
- தொழில் செய்வதற்கான சம உரிமை உண்டு.
- சுகாதார சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான சம உரிமை உண்டு.
- பொருளாதார மற்றும் சமூக உரிமை உண்டு.
- கிராமியப் பெண்கள் மீது அதிக கவனம் செலுத்துவதுடன் கடன் வசதிகள் மூலம் கிராமங்களை கட்டியெழுப்பவதற்கும் பெண்கள் உரிமையானது எல்லா அபிவிருத்திச் செயற்திட்டங்களிலும் உள்ளடக்கப்படுவதனை அடையாளப்படுத்துகின்றது.
- சட்டத்துறை சார்ந்த சமத்துவம்.
- திருமணத்திலும், குடும்பத்தினுள்ளம் சமத்துவம்.

இவ்வாறாக ஆண்களைப் போலவே பெண்களுக்கு சம உரிமைகள் காணப்படுகின்றன. ஆனால் பெண்கள் சிலர் தமக்குள்ள உரிமைகளை அறியாதவர்களாகவும், சிலர் தெரிந்தும் அதனைப் பெறாதவர்களாகவும் காணப்படுகின்றனர். ஆனாலும் சிலர் அதனைப்பெற்றக் கொள்கின்றனர்

- இனியும்வரும் -

**ஆக்கங்களை அனுப்பியவர்களுக்கு....**

எழுத்தாளர்கள், கவிதைகள், ஆய்வாளர்கள், மாணவர்கள் தங்கள் ஆக்கங்களை A4 தாளில் எழுதி எமக்கு அனுப்பி வைக்கவும்.

(ஆ-ர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



02

# பழமொழி பரமசிவத்தார்

– பற்றூரான் –

வணக்கம் காசிப்புள்ள. எங்க இருந்திடாப்பா வாறா ஒரு மூட்ட யோசனையோட... என்ன, பாண்றூப்பு அகரத்தால விழாவில வெளியிட்ட மணிப்புறாப் புத்தகம் வாங்கித்து வாறயா!.... தாடாப்பா பாப்பம்... ம்.. நல்லாத்தான் கிடக்கு.. "ஒரு பானச் சோத்துக்கு ஒருசோறு பதம்" எண்டாப்போலடா தம்பி உண்மையில அவங்க செய்யிற சேவையலுக்கெல்லாம் இந்தப் புத்தகமொண்டே நல்ல உதாரணம். அந்த அகரம் அமைப்புக்கு நாமளும் நம்மட உதவிகளச் செய்யனும்டாதம்பி

காசிப்புள்ள... இந்த டெங்கு ஒழிப்புச் சம்மந்தமான தெருநாடகமொண்டு நம்மட ஊருல நாளைக்குப் போடப்போறாங்களாம் வாவன் போய்ப்பாப்பம்.. என்ன நேரமில்லையா? முதியோரில்லத்தில இருக்கிற உண்ட அம்மாவப் பாக்கப்போறியா... அடபாவமே!... என்ன கொடுமயடா நீங்கெல்லாம் செய்யிறியள்... உங்களுக்கிது நல்லாயிருக்கா? அடேய்... தாயெண்டா நாம குடியிருந்த கோயிலுடா... "தாயிற்சிறந்ததொரு கோயிலுமில்லை" எண்டு சொல்லுறத்தெல்லாம் ஏண்டா மறந்து பாவத்தை தேடுறியள்...

நீங்க நாலுபேரல்லா சகோதரங்கள். நீ மட்டுந்தானே ஆம்புள்ள. ஊட்டுல வச்சி தாயப் பாக்கேலாதா? உண்ட அப்பன் புண்ணியஞ்செஞ்ச மனிசன் போய்ச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேந்திட்டாரு. "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" "அறிஞ்சறிஞ்சி செய்த பாவத்தை அழுதழுது தொலைக்க வேணும்" எண்டெல்லாம் சொல்லுறாப்போல, நாம செய்யிறதத்தான், நாளைக்கு நம்மட புள்ளையளும் நமக்குச் செய்யும் அறிஞ்சறிஞ்சி செஞ்ச பாவத்த குழறிக் குழறித்தான் போக்க வேணும்... அதால, நாளைக்கு நானும் வாறன்... உண்ட அக்கா தங்கச்சிமாரோடெல்லாம் கதச்சி உண்ட அம்மாவை ஊட்டுக்குக் கொண்டுவருவம்.

அந்தாப் பாருடா காசிப்புள்ள, ஒருவன் மோட்டசைக்கிள்ல தனியக் கையக்காட்டி கதச்சி ஓடிப்போறான். இந்த கேன்போன் வந்திட்டதால எவ்வளவு புதுனண்டா நடக்குது... அந்த நாளில பைத்தியக்காறன்தான் றோட்டால தனியக் கதச்சிப் போவான். இப்ப என்னண்டா காலம் மாறிப்போச்சி... வாகனம் ஓட்டக்குள்ள தன்னந்தனியாக கதச்சிப்போக்குள்ள ஆபத்துக்கள் எங்களுக்கு வருந்தானே! "ஏரி உடைவதுக்கு முன்னால அணைபோட வேணும்" எண்டு சொல்லறாப்போல போன கிழம இன்னா மோட்டசைக்கிளில போன் கதச்சிப் போறவன்போலதானே போன் கதச்சி சைக்கிளோடிப்போன நம்மட செல்லண்ட மகன் ருபேசி மோதிக் காலுடஞ்சி ஆஸ்பத்திரியில படுக்கான்... அவன் மோதினத்தக்கண்ணால பாத்தவங்க சொன்ன இதாலதான் ஆபத்து வருமெண்டு அறிஞ்சா அதுக்கேத்தாப்போல நடக்கவணும்...நானும் இந்த பொடியன்மாரிட்டல்லாஞ் சொல்லுறதுதான் அடேய் தம்பிமாரே! பாஸ்டா வாகனம் ஓடாதங்க, ஓடக்குள்ள போன் கதையாதங்க எண்டெல்லாம். எங்க.. கேக்கிற புள்ளதான் கேப்பான்.

என்னவோடாதம்பி, கொஞ்சநாளா உலகம் அழியப்போகுது உலகம் அழியப்போகுதெண்டெல்லாம் சொல்லிச் சொல்லி மனுசனுகள் படாதபாடுபட்டாங்க... ஏன் நீகூட பயந்துதான் இருந்தநீ.. "மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்" எண்டாப்போலதான் சனங்கள் பயந்த... "அவனன்றி ஓர் அணுவும் அசையாது" எண்டு ஆண்டவன நம்புனா ஏன் இதுக்கெல்லாம் பயப்படவணும். மாயண்ட கலண்டரப் பத்தி எப்பிடியெல்லாம் கதச்சாங்க... சரி காசிப்புள்ள மகள்ற ஊட்டயும் போகனும். புறகு சந்திப்பம் வணக்கம்!



முன்னர் எல்லாம் வாங்குற பொருட்களிலதான் கலப்படம் இருக்கும். இப்ப செய்யிற தொழிலிலையும் கலப்படம் இருக்கு. நம்மட நாட்டில 40ஆயிரம் போலி வைத்தியர்கள் இருக்காங்களாம். நோயாளிகள் யாக்கிரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியர். இராசலிங்கம்
பாண்டிருப்பு 01




# நோய் தீர்க்கும் துளசி

வெண்துளசி இலைச்சாறு ஒரு மேசைக்கரண்டி அளவு எடுத்து அதே அளவு தேன் கலந்து காலை மாலை இருவேளை உட்கொண்டால் கபத்தினால் வந்த இருமல் தீரும்.

துளசி இலைச்சாற்றை 4–5 துளி காதில் விட்டால் காதில் சீழ் வடிதல் மாறும்.

துளசி வேர், சுக்கு இவ்விரண்டையும் சமஅளவு எடுத்து மைய அரைத்து விழுதாக்கி நாள்தோறும் காலையில் மட்டும் இளஞ்சூடுள்ள நீர் ஒரு அவுன்ஸ் அளவு கலந்து 40 நாள் உட்கொள்ள குட்டம் தீரும்.

துளசி இலை ஒரு கைப்பிடி அளவு எடுத்து அரைப்போத்தல் நீர்விட்டு மூன்றில் ஒருபங்கு வரும் அளவு காச்சி எடுத்து காலை, மாலை உட்கொள்ள சாதாரண காய்ச்சல் தணியும். இப்படியே புதிதுபுதிதாய் செய்து ஒரு வாரம் வரை குடிக்கவும்.

துளசிஇலை 10 கிராம் மிளகு 10 கிராம் பாகல் இலை 10 கிராம் கடுகு ரோகணி 40 கிராம் இவைகள் அனைத்தையும் தக்கஅளவு சுடுநீர் விட்டு அரைத்து கடலை அளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு காலை மாலை வயதுக்குத் தக்கபடி 1 அல்லது 2 மாத்திரைகள் உட்கொள்ள மலேரியாக் காய்ச்சல் (விசஷசுரம்) தீரும்.

துளசி இலை இரண்டு கைப்பிடி அளவு எடுத்து அரைப்படி நீர்விட்டு கசஷாயம் செய்து அரைத்தேக்கரண்டி அளவு சாதிக்காய்த்தூள் செய்து கலந்து சிறிது தேன்விட்டு இரண்டு அல்லது மூன்று நாட்களாகக் குடித்தால் அதிசாரபேதி தீரும்.

துளசி இலையை நிழலில் உலர்த்தி தூள் செய்து 10 கிராம் அளவு எடுத்து சிறிதளவு கறிஉப்பும் கலந்து வெந்த நீரில் கலக்கி சாப்பிட்டால் அசீரணம் தீரும்.

துளசி இலைச்சாறு 1 மேசைக்கரண்டி, அதேஅளவு ஆடாதோடை இலைச்சாறும் கலந்து சிறிதளவு தேன்விட்டு இருவேளையும் குடிக்க இருமல் தொண்டை வரட்சி மூச்சி ஆஸ்மா தீரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவஸ்ரீ சி.சிவபாலன்ஐயர்
கலை ஞான நிருத்தன்
கல்லடி, வேலூர்.

# சமூகமும் சமாதானமும்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இந்த ஐவரினதும் வெற்றிகளுக்குப் பின்புலமிருந்தவை அனைத்திலும் அஹிம்சை நெறியே மேலோங்கியிருந்தது! இதுதான் இந்த உலகிற்குப் பொருமைகொடுத்திருக்கிறது!

அஹிம்சையுடன் நாம் வாழ்வதற்கு நம்மிடத்தில் குடிபுகுந்திருக்கும் மாயையை வெருட்டியடிக்க வேண்டும். இதற்கு நான் என்னை உணரவேண்டும். என் சமூகத்தைப்பற்றி உணரவேண்டும். பற்றும்,பாசமும் வைக்கவேண்டும். உண்மையாகவே தன்னை அர்ப்பணிந்து சமூகத்துக்காகச் சேவையாற்ற வேண்டும். “மக்கள் சேவை மகேசன் சேவை” என்ற உண்மையை உணர்ந்து செயல்படாதவனுடைய எந்தவொரு சமூகசேவையும் நல்ல பயனளிக்க மாட்டாது.

பாரதம் போற்றும் உத்தமன் மட்டுமல்ல, உலகம் போற்றும் உத்தமன் காந்தி ஜீ எழுதிய ‘சத்திய சோதனை’ தற்கால மனிதனின் வாழ்க்கை நெறியென்ற போர்வையினையும், ஞானத்தையும் சீர் செய்யவல்ல சாணைக்கல்.

உலகச்சக்கரத்தின் மத்தி (*Center of the wheel*) நான்கு குத்துக்கால்களால் மிகவும் பலப்பத்தப்பட்டு உறுதிமிக்க அச்சாணியுடன் தொடர்பு கொண்டுள்ளது. முதலாவது காலுக்கும் இரண்டாவது காலுக்கும் இடைப்பட்ட பகுதியை ஒரு யுகமாக இந்து சமயம் காட்டுகிறது. இவ்வாறாக நான்கு இடைவெளிகளையும் நான்கு யுகங்களாகக் காட்டி விளக்கமளிக்கிறது இந்து மதம்.

முதலாவது இடைவெளிக் காலத்தை கிரேதாயுகம் இரண்டாவது இடைவெளிக்காலத்தை திரேதாயுகம், மூன்றாவது இடைவெளிக்காலத்தை துவாபரயுகம், நாலாவது இடைவெளிக்காலத்தைக் கலியுகம் என்று மேலும் விபரிக்கிறது இந்துமதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் துவாபரயுகம் முடிவடைந்து கலியுகம் தோன்றி 5114 வருடங்கள் என்று நந்தன வருஷ பஞ்சாங்கம் ஆங்கில வருஷம் 2012 இல் குறிப்பிடப்படுகிறது. கலியுகம் மொத்தம் 432,000 வருடங்கள் உண்டு இந்த வருஷத்தின் இறுதிக்காலத்தின் ஒருநொடிக்காலம் சங்கமயுகம் நிச்சயம் அமுலாக்கம் பெறும். இந்த யுகத்தையே நாம் அனைவரும் நோக்கிப் பயணிக்கிறோம்.

கிரேதாயுகத்தை தங்கயுகம் என்றும், திரேதாயுகத்தை பொன்யுகம் என்றும், துவாபரயுகத்தை வெள்ளி யுகம் என்றும், கலியுகத்தை இரும்புயுகம் என்றும் இந்த இரும்பு யுகத்தின் இறுதிக்காலமே சங்கம யுகம் என்றும் பாபா சொல்கிறார் என்கிறது பிரம்ம குமாரிகளின் இத்தத்துவம்.

கிரேதாயுகம் என்ற தங்க யுகத்திலே பூனையும் கிளியும் ஒன்றாக ஒருகூட்டில் வாழ்ந்தன. அதே போல் சிங்கமும் முயலும் ஒன்றாக அன்புடன் வாழ்ந்தன.

அவை ஒன்றை ஒன்று பிடித்து உண்ணாமலே அன்புடன் வாழ்ந்தன. எங்கும் தங்கம் கொட்டிக் கிடந்தன. பொருட்கள், கருவிகள் அனைத்தும் தங்கத்தினாலே செய்யப்பட்டிருந்தன. இதனால் இந்த யுகம் தங்கயுகம் என்றழைக்கப்பட்டது. மனிதனும் தன்னுடைய சிந்தனையைத் தங்கமாகவே வைத்துக் கொண்டிருந்தான். இதேபோல் திரேதாயுகம் என்றழைக்கப்படுகின்ற இரண்டாவது யுகம் பொன்மயமான பொன்யுகம். மனிதனும் அவ்வாறே இருந்தான். பொருட்களும் கருவிகளும் பொன்னாலே உருவாகியிருந்தது. இதேபோல் மூன்றாவதான யுகம் துவபாரயுகம். இந்தயுகத்தில் அனைத்துமே வெள்ளியினாலானது. மக்களின் மனமும், சிந்தனைகளும், செயற்பாடுகளும் அவ்வாறே இருந்தது. இந்தயுகத்தில் அவதரித்து ஆட்சிசெய்தவர்களே பாண்டவர். மூன்றாவது யுகம் முடிவடைந்து வருகின்ற காலத்திலேதான் மனிதனுக்குள் பொறாமை, வஞ்சகம், செருக்கு, முரண்பாடு, பிரச்சனை, சண்டை, சச்சரவு இவ்வாறு அழிவுப்பாதைகளை நோக்கி மனிதன் வந்துகொண்டிருந்தான். துவாபரயுகத்துக்கு முன்னர் மனிதர்கள் ஒவ்வொருவரும் தன்னைத்தானே ஆண்டு கொண்டும் பாவம், புண்ணியத்தை உணர்ந்து கொண்டும், முரண்பாடுகள் எதையும் மாற்றியமைத்துச் சாதகமாக ஆக்கிக்கொள்ளும் திறமைகளைக் கொண்டும் வாழ்ந்திருந்தனர். இறைபக்தியும், இறைஅன்பும் வெகுவாகவும், மலிவாகவும் யாரிடத்திலேனும் செறிந்து கிடந்தது. அன்புக்குப் பஞ்சமில்லை. அன்பே சிவம் என்ற தத்துவத்தைக் கொண்டு ஒழுகுபவர்களாய் அனைவரும் இருந்து வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவாபரயுகம் தோன்றிய காலத்திலிருந்து சிறுசிறு மாற்றங்களை இவ்வுலகம் கண்டறிந்து வந்தது. அப்போது முனிவர்களும், தவசிகளும் மனிதர்களை வழிப்படுத்தினர். வேதங்களும் யாகங்களும் உலகில் வெகுவாகின. இறைஅன்பு, இறைபக்தி மேலும் ஓங்கியது. இந்தயுகத்தில் வருடங்கள் வளரவளர மனிதர்களும் மாற்றமடைந்து வந்தார்கள். குருசீட பரம்பரையினர் மிகவும் நிதான உணர்வும், விழிப்புமடைந்தார்கள். நாயன்மார்கள் தோன்றினார்கள். இவ்வாறான சில மாற்றங்கள் ஏற்பட்டு துவாபரயுகத்தில் மனிதன் திக்குமுக்காடித் தவிக்கும் காலம் உருவாகியது. வேதங்கள் விரிவுற்றன. சமயவேறுபாடுகள் அதிகரித்தும் வேறுபட்டும், வழிபாட்டு முறைகளிலும் இறைவனைத்தேடி அவனை அடையும் வழிகளிலும் வேறுபாடுகள், பலதரப்பட்ட பிரிவுகள் வேறுபட ஆரம்பித்தன. பின்னர் பல்வேறுபட்ட பிரிவுகளாகவும், வேறுபட்ட இனங்களாகவும், பல்வேறுபட்ட மொழித்திறன்கள் மிக்கதாகவும் மாற்றம் பெற்று வந்தன.

மக்கள் மனதில் பல்வேறுபட்ட முரண்பாடுகள் வலுவடையத் தொடங்கியதும் இறைவனால் பற்பல சமயங்களையும் வழிநடத்திச் செல்லக்கூடிய தலைவர்கள் தோன்றினார்கள்.

உலகம் தோன்றிய காலத்தில் இறைவனால் அருளப்பட்ட சகல வேதங்களும், ஏடுகளும் புழுதி துடைக்கப்பட்டு மக்கள் மத்தியில் இறைஞானம் பெற்ற தலைவர்களால், ஞானிகளால் போதிக்கப்பட்டன. இந்துசமயத்தின் வேதங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு மனிதர்கள் மத்தியில் விரிவுபட போதிக்கப்பட்டது போல நபிகள் நாயகம் அல்லல்லாஹ் ஹூ அலைகுவசல்லம் அவர்களின் அருள்மிக்க புனித திருக்குர்ரான் விரிவுபட்டது. அதுபோல இயேசு கிறிஸ்துவின் சமய போதனைகளும், மலைப்பிரசங்கங்களும் மகிமையடைந்தன. புனிதர் கௌதம புத்தர் சித்தாத்தன் என்ற நாமத்திலிருந்து விடுபட்டார். பரிணாமம் பெற்றபின் தன்னுடைய வழியில் சிறந்ததும் மக்கள் விளங்கிக் கொண்டு தங்களை தனியே மாற்றிக்கொண்டும் வாழ்ந்து நன்மையடைவதற்கு புத்த தர்மம் போதித்தார். அவர் அடைந்த ஞானமார்க்கங்களை மக்களுக்கு வழங்கினார்.

இவர்களுக்குப் பின்னால் வந்தவர்கள் இராமக்கிருஷ்ணர், சாரதாதேவியார், விவேகானந்தர் போன்றவர்கள். இவர்களைத் தொடர்ந்தே பல இன, மத, மொழி சார்ந்த பல்வேறுபட்ட சமுதாயங்களிலும் சமயங்களிலிருந்தும் பற்பல ஞானபுருஷர்கள் தோன்றி உலக உய்வுக்கு வழிவகுத்தனர். துவாபரயுகத்தை யடுத்த கலியுக வாழ்க்கைக்கு மக்களை வழிநடத்திச் சென்று கொண்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்தி மகான் போன்றவர்கள் , இராமகிருஷ்ணபரமஹம்சர், சாரதா தேவியார், விவேகானந்தர் போன்றோர் கலியுக புருஷர்களாயிருந்து சேவையாற்றினர். இவர்களோடு சமகாலகட்டத்தில் பிரம்மகுமாரிகள் தியான பீடத்தை ஏற்படுத்திய பிரம்ம பாபாவும் மக்களை நன்றாகவே வழிநடத்த முன்வந்தார்.

கலியுக காலத்தில் நபிமார்களும், நாயன்மார்களும், பாபாக்களும், இன்னும்பல சித்தர்களும், ஞானிகளும் தோன்றித் தோன்றி மனிதனைக் கௌவிக்கொண்ட சாத்தானின் பிடிகளில் இருந்து விடுவிக்கும் வழிகளைப் போதிக்கத் தொடங்கினர். இந்தப் போதனைகள் இப்போதும் கூட தொடர்கதையாகவே நகர்ந்து செல்கின்றது.

சமகாலத்தில் உலகின் பல பாகங்களிலும் முரண்பாடுகள் தோற்றம் பெற்று, பலதரப்பட்ட அழிவுகள் பூதாகாரம் பெற்று மனித குலத்தை அழித்துக்கொண்டு முன்நோக்கி நகர்ந்து செல்கிறது. சமாதான உணர்வு யாரிடையேனும் இருப்பதாக உணர முடியவில்லை.

இதன் பின்புலத்தில் சகல நாடுகளிலும் அரசியல் இலாபமே நின்று செயற்படுகின்றது. அரசியல் வாதிகளின் துருப்புச் சீட்டுக்கள் இன்றளவில் சிவில் சமூகமே. சிவில் சமூகம் விழிப்படைந்து விட்டால் விழிப்படைந்த சிவில் சமூகம் தொட்டம் தொட்டமாக அழிக்கப்பட்டு வருகிறது. ஆட்சியாளர்களின் யுக்தி அங்கே அவர்கள் மத்தியில் புதிய பரிணாமம் அடைந்து புதுப்புது வழிமுறைகளின் யுக்திகளாலும், பொறிமுறைகளாலும் திட்டமிட்டு அழிக்கப்பட்டே வருகின்றது. மேலும், மனிதன் இன்று நச்சு வாயுக்களுக்கும் அணுஆயுதங்களுக்கும் முகம்கொடுத்த வண்ணம் மனிதர்கள் அனைவருமே ஒட்டுமொத்தமாக உலகஅழிவினை எதிர்பார்த்த வண்ணமே இருக்கின்றனர். இன்றைய காலகட்டத்தில் மனிதன் தன்னை மாற்றிக் கொண்டாலோ, தான்மாறிக் கொண்டு சமுதாயத்தையும், சமூகத்தையும் மாற்றிக்கொண்டாலோ அல்லது தத்தமது சமயங்கள் கூறுகின்ற அடிப்படைத் தத்துவங்களையும் கருத்துக்களையும் கொண்டதாக சமய சகிப்புத்தன்மைகளை வேரூன்றச் செய்து மனிதனை மாற்றிவிட்டாலோ, அல்லது பல்வேறுபட்ட முரண்பாடுகளை மனதிலிருந்து நிலைமாற்றம் செய்துகொள்ளக் கற்றுக்கொண்டாலோ தாம் அணுயுகத்தின் தாக்கத்திலிருந்து தப்ப முடியாது.

உலகில் சமாதானத்தை நாம் ஏற்படுத்தினாலும் அணுயுகத்தில் நாம் சமாதானத்துடனும், நல்லிணக்கத்துடனும் வாழ்வதற்குப் புதியதோர் உலகம் படைக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்தவுடன் இவ்வுலகையும், உலகமக்களையும் மாற்றிவைக்க நான் ஒரு கடவுளுமல்ல, ஞானியுமல்ல என்று ஒவ்வொரு தனிமனிதர்களும் கருத்துக்களை வெளியிட்டாலும், ஒவ்வொரு தனிமனிதனும் தன்னை மாற்றிக்கொள்வதில் தவறிவிடாதீர்கள் என்பது உண்மைதான். நீயும் உன்னை மாற்றிக்கொண்டு, பிறரையும் மாற்றிக்கொண்டு உன்னுடன் வாழவேண்டும் என்று எண்ணினாலே அது உலகின் சமாதானத்தை நிலைபெறச்செய்ததற்கு ஒப்பானதாகிவிடும்.

தமிழ் – இந்துக்கணக்கின்படி கிருதயுகம் 1728000 வருடங்கள், திரேதாயுகம் 12,96000 வருடங்கள், துவாபரயுகம் 864000 வருடங்கள், கலியுகம் 432000 வருடங்கள் சேர்ந்து ஒரு சதுர்யுகத்தை ஏற்படுத்தி ஆகமொத்தம் 4320000 வருடங்கள் இவ்வாறாக 71 சதுர்யுகம் ஒருமன்வந்தரமாககவும், 1000 சதுர்யுகம் சேர்ந்து ஒரு கற்பமாகவும் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. கற்பகாலயத்திற்குப் பின்னரே இந்த உலகம் இயற்கையின் சீற்றத்தால் அழியும். அழிவின் போது படைப்புக்கள் அனைத்தும் அழிவுற்று முதனின்று யுகங்கள்தோன்றும் புதிய மக்களும், படைப்புக்களும் தோன்றுவர் என்று கூறினாலும் கூட இவ்வாறான கணக்கு மெய்யாகும் நிலை எம்மால் கண்டறிய முடியாதவொன்றே.

நாம் இம்மண்ணில் வாழ்ந்திருக்கும் காலம் வரை அனைவரையும் நேசித்து இன்புற்று வாழ்வதும், சமாதானமாகவும், சந்தோசமாக வாழ்வதும் அவரவர் சமயங்களில் கட்டுப்பட்ட வழிமுறைகளைக் கடைப்பிடித்து வாழ்வதும் எமது கடமையாகும். எமது கடமை சரியாக நிறைவேற்றப்பட்டால் நிறைந்த ஒரு சமாதான உலகில் நாம் வாழ்ந்திருக்க முடியும். முரண்பாடுகள் இயற்கையானது, அழகானது, பண்மைத்துவப் பண்புடையது. இதனைக் காலத்துக்கும் நேரத்துக்கும் ஏற்றாற்போல, நிலைமாற்றம் செய்து வாழ்ந்து இன்புறுவோமாக!

மனிதன் தன்னை மாற்றிக்கொண்டு ஒரு புதிய உலகம் படைக்க வேண்டும் என்ற எண்ணத்தைக் கொள்ளும்போது முதலில் துன்பம் நிறைந்த பழைய எண்ணங்களை அகற்றிக்கொள்ள வேண்டும். மனிதனின் இளமை வாழ்விலே தன்னகத்தே கொண்டுள்ள இரத்த ஓட்டத்திற்கும் பின்னர் அவன் முதுமையடையும் போது அவன் உடலில் உள்ள இரத்த ஓட்டத்திற்கும் இடையில் பற்பல மாற்றங்கள், வித்தியாசங்கள், வேறுபாடுகள் உள்ளன. இது இயற்கையானதே. இரத்தத்தின் சூடும் கூட வயதுக்கு ஏற்றவாறு வித்தியாசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளும் என்பதுடன் நல்ல சிந்தனையுடன் செயற்படும்போது உள்ள அதன் சூட்டுக்கும், கெட்ட சிந்தனையை மனிதன் தன்னகத்தே கொண்டுள்ளபோது அவனது இரத்தம் கொண்டுள்ளபோதில் வேறுபட்டவாறும் அச்சூடு இருக்கும். இயல்பாகவே அவனது மனதும் சிந்தனையும் அலைபாய்ந்து வெவ்வேறுபட்ட சூட்டின் தன்மையை உடையதாக இருக்கும்.

ஒரு சாதாரண எண்ணத்தாலேயே எப்பேற்பட்ட வகையிலும் எண்ணங்களையும், சிந்தனைகளையும் மாற்றமுடியும் என்பதால் இளமையில் கல்வி அவசியமானது. திடமான கல்வி இளமையில் அமையும் போது தான் மனிதனின் சேவை நாட்டிற்குப் பயனளிக்கிறது. கல்வி என்பது வெளிஉலகத்திற்கு எவ்வகையில் தேவைப்படுகிறதோ அதற்கும் மேலாக மனிதனின் உள்ளார்ந்த உலகத்துக்கு அவசியமாகின்றது. மனிதன் தன் வாழ்நாளை நன்றாக, நல்வாழ்த்துக்களாக இறைசிந்தனையுடன் இருந்து கழிக்க வேண்டும்.


வாழ்வில் நாம் துக்கத்தை ஒருதுளி கூட ஏற்று அனுபவிக்காத தன்மையை வரித்துக்கொள்ள முனைய வேண்டும். வாழ்வில் சாதாரணமான மிகஎளிய துக்கம் கூட மனஉறுதியைக் கெடுத்துவிடும். இதற்கு இறைவனிடம் சரணாகதி அடைவதைத் தவிர வேறில்லை. சரணாகதி அடைந்தால் மாயை எமைப் பற்றிக்கொள்வதில்லை. இதற்கு ஒரு தகுந்த குருவை அடைய வேண்டும். குருவினால்தான் மனிதனின் சிந்தனையை தெளிவடையச் செய்யவும் மனதில் சமாதானத்தை ஏற்படுத்தி சமூகத்துக்குப் பயனுள்ளவராக மனிதனை மாற்ற முடியும். உலகம் உய்வடைய எம்மால் சிறிய பங்கேனும் ஆற்றமுடியும். முழுஉலகை உன்னால் மாற்றமுடியாதாயினும், மனிதனே நீ உன்னை மாற்றிக்கொண்டு உனக்கும் சமூகத்திற்கும் நன்மை தருவாயாக!

(முற்றும்)

கிழக்கிலங்கை சிற்றிதழ்கள் ஒன்றியம் ஒன்று உதயமாகியுள்ளது. சிற்றிதழ்களின் நலன் பேணும் அமைப்பாக இது செயற்படவுள்ளது. இதன் புதிய நிர்வாக சபையின் தலைவராக செங்கதிரோன் த.கோபாலகிருஷ்ணன், செயலாளர் கதிரவன் த.இன்பராசா, பொருளாளர் மகுடம் சஞ்சிகை சார்பாக ச.மணிசேரன், உபதலைவர் மணிப்புறா பாவாணர் அக்கரைப்பாக்கியன், உபசெயலாளர் நீங்களும் எழுதலாம் எஸ்.ஆர். தனபாலசிங்கம் ஆகியோர் தெரிவாகியுள்ளனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




K-T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org